

அகிம்சையும் அதன் தத்துவங்களும்





முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு
முனைவர் ச. வின்சென்ட் டி பால்

அகிம்சையும் அதன் தத்துவங்களும்

முனைவர். அ.அ. ஞானசுந்தரத்தரசு
முதல்வர். ஸ்ரீ பாரதி ஆசிரியப் பயிற்சி நிறுவனம்
இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம்

முனைவர். ச. வின்சென்ட் டி பால்
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம்
புதுக்கோட்டை - 4.

(ஆங்கில மூலம் : **டாக்டர் இரவீந்திர குமார்**)

தமிழ்ச் சோலைப் பதிப்பகம்,
14, முத்துக் கருப்பனார் நகர்,
புதுக்கோட்டை - 622 003
தொலைபேசி : 04322 - 260755

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	அகிம்சையும் அதன் தத்துவங்களும்
ஆசிரியர்	:	நூலாசிரியர்கள் முனைவர். அ.அ. ஞானசுந்தரத்தரசு முனைவர் ச. வின்சென்ட் டி பால்
பொருள்	:	அகிம்சை பற்றிய தத்துவங்கள்
பதிப்பு	:	முதற்பதிப்பு, 2004
அளவு	:	கிரவுன்
எழுத்து	:	12 புள்ளி
பக்கங்கள்	:	96
விலை	:	ரூ. 35
ஒளிஅச்சு	:	சபரி கிராபிக்ஸ் சென்னை - 5
வெளியீடு	:	தமிழ்ச் சோலைப் பதிப்பகம் 14, முத்துக் கருப்பனார் நகர், புதுக்கோட்டை - 622 003 தொ : 04322 - 260755
அச்சிட்டோர்	:	கவிக்குயில் பிரிண்டர்ஸ் சென்னை - 5 தொலைபேசி : 28446107

முன்னுரை

மீரட், சவுத்திரி சரண்சிங் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தராகிய டாக்டர் இரவீந்திர குமார் அவர்களின் "Non Violence and its Philosophy" என்ற நூலினைப் படிக்கும்போது, அதன் ஆழ்ந்த பொருள்நலம் அனைவர்க்கும் பயன்தரத் தக்கது என்பதனை உணர்ந்தோம். உலகெங்கும் அவ்வப்போது போர் மேகம் சூழ்ந்து, மனிதர்க்கு ஏற்படுத்தும் இன்னல்களின் அடிப்படைக் காரணங்களை உணர்ந்து கொள்ள இந்த நூல் வழி வகுக்கிறது என்பதையும் அறிய முடிந்தது. இணக்கமான சூழல், விட்டுக் கொடுத்தல் ஆகிய பண்புகள், அகிம்சையின் அடித்தளத்தில் அமைந்து கிடப்பன என்பதைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள், வரலாற்று நிகழ்வுகள், தத்துவச் சிந்தனைகள் ஆகியவற்றின் வாயிலாக இந்நூலில் நிறுவப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் என்பதற்குப் பக்கம் ஒன்றா, இரண்டா என்பதனை மிக நுண்மையாகப் பார்க்கும் போது, நாணயத்தின் இருபக்கங்களைப் போல, நல்லிணக்கத்திற்கு பக்கங்கள் இரண்டே என்பது இந்நூலால் புரியவரும்.

மன்னிப்பை அளித்தலும் அம்மன்னிப்பைப் பெற்றவர் அந்த ஒளியால் உயர்ந்து நிற்பதும் அகிம்சையின் உட்பொருள்களாக இருக்கின்றன. எனவே இரண்டு பக்கங்களைவும் இயங்கச் செய்வதே உண்மையான அகிம்சை. காந்தியடிகள் அகிம்சை என்பதற்கு நடைமுறைக்கு ஒத்துவரும் முறையில் விளக்கம் கண்டிருப்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அகிம்சை என்பதன் அடி ஆழத்தின் வேர் முதல், உச்சியில் பூத்துக் குலுங்கும் பூங்கொத்து வரை, காட்டி நிற்கும், இந்நூலினைச் செந்தமிழில் மொழிபெயர்ப்பது, தமிழ் உலகுக்கு அணி சேர்ப்பதாக அமையும் என்ற உறுதிப்பாட்டுடன் மொழியாக்கம் செய்திருக்கின்றோம்.

மொழிபெயாப்பின் போது இது மொழியாக்க நூல் என்னும் சோர்வு தோன்றாது, ஆக்கம் செய்வதே மொழி பெயர்ப்பின் தலையாய இலக்கணம்.

கம்பன், வழிநூலாக இராமாயணத்ப்பை படைக்கும் போது பின்வரும் கருத்தைக் கூறுகின்றான் :

வாங்கஅரும் பாதம் நான்கும்
வகுத்த வான்மீகி என்பான்,
தீம் கவி, செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்
எனவும், அத்தகைய வான்மீகி இராமாயணத்தை,

மூங்கையான் பேசலுற்றான் என்ன, யான் மொழியலுற்றேன். எனவும் கூறுகின்றான். மெத்த அவையடக்கத்துடன் கம்பன் தனது மொழியாக்கத்தினைப் பற்றிக் கருத்துக் தெரிவித்திருக்கின்றான்.

'வாய்பேசத் தெரியாத மூங்கையான் சாடையாகக் கருத்துகளைத் தெரிவிப்பதைப் போல நானும் வான்மீகியின் கருத்துகளைத் தமிழில் எடுத்து மொழிந்துள்ளேன்' என்று கம்பன் கூறினாலும், அவனது மொழியாக்கம் மொழிபெயர்ப்பு என்ற பணிக்கு முடிமணியாகவும் சிகரமாகவும் இருக்கிறது.

ஊமைச் சாடையுடன் நடிப்பும் கலந்து இருப்பதால் அது 'கம்பநாடகம்' என்றாகி, நாடகத்தின் நயமெல்லாம் பொதிந்த நூல் அது என்று அறிஞர் கருதுவது உண்டு.

அவ்வாறே இந்நூலினை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கும் போது, படிப்பார் உணர்வு குன்றாமல் இருக்கும் பொருட்டு, தமிழ் நூல்களில் உள்ள விளக்கங்களையும் இடை இடையே பெய்து, நூலின் சுவையினைக் கூட்ட முயன்றிருக்கின்றோம்.

கல்விப் பயிர் தழைக்க வேண்டும் என்பதிலே, கண்ணுங் கருத்துமாக இருந்து வரும் ஸ்ரீபாரதி கல்வி அறக்கட்டளையின் இயக்குநர் திரு.இரா.சி. உதயகுமார் அவர்கள், இந்நூல் சிறப்பாக வெளிவந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து ஊக்கம் அளித்து வந்தார். அவருக்கு எங்களது உளம் நிறைந்த நன்றி உரியது.

இந்நூலாக்கத்தின் போது, பல்வேறு வகைகளில் உதவி புரிந்த விரிவுரையாளர்கள், திரு.கே. நரசிம்மன், திரு.சு. பிரசன்னகுமார், திருமதி.ஜெ. வசந்தகோகிலம், செல்வி ச. மாலதி ஆகிய அன்பு நெஞ்சங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி, அறநெறிக் கல்விக்கு ஏற்ற நூல் இது என்பதனைப் புலப்படுத்திக் காட்டிய, திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழக கல்வித் தொழில் நுட்பவியல் பேராசிரியர் டி. சுதந்திராதேவி அவர்கட்கு உளம் விரும்பிய நன்றியை உரிமை ஆக்குகின்றோம்.

அ.அ. ஞானசுந்தரத்தரசு
ச. வின்செண்ட் டி பால்

டாக்டர் டி. சுதந்திரா தேவி,
பேராசிரியர்
கல்வித் தொழில் நுட்பத்துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி

அணிந்துரை

முனைவர்.அ.அ. ஞானசுந்தரத்தரசு, முனைவர் ச. வின்சென்ட் டி பால் ஆகிய இருகல்வி இயல் ஆராய்ச்சியாளர்களும் "அகிம்சையும் அதன் தத்துவங்களும்" என்ற தலைப்பில் வழங்கியுள்ள நூல், அறநெறிகள் குறித்தான புத்தாக்கச் சிந்தனைகள் மலர வேண்டியுள்ள தற்போதைய சூழலுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

டாக்டர். இரவீந்திர குமாரின் 'Non Violence and Its Philosophy' என்ற ஆங்கில மூலத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பினும், சிந்தனைத் தொடர்ச்சி தடைபடா வண்ணம் செந்தமிழில் இந்நூல் ஆக்கப்பட்டிருக்கின்றது. கீழை நாட்டுச் சிந்தனைகளில் திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா ஆகிய நூல்களில் காணப்படும் அறஉணர்வுகளை இழையோட விட்டிருப்பது பொன்னுக்கு மணிசேர்த்ததனைப் போல அழகும் பொலிவும் மிளிர்வதாக அமைந்திருக்கின்றது.

நாடுகள், இயக்கங்கள், மன்றங்கள், ஏன் இன்னுஞ்சொல்லப் போனால் குடும்பங்களின் முன்னேற்றம் சிலரின் தன்னலப் போக்கால் முட்டுப்பட்டு நிற்பதனைக் காண்கின்றோம். அகிம்சை என்பதன் விரிவான பொருளை

உணர்ந்து பார்க்கும் போது தன்னலப் போக்கு குறைகின்றது; முயற்சியும் முன்னேற்றமும் தழைக்கின்றது இதனை இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

அகிம்சை பற்றிப் பலநாட்டு அறிஞர்கள், பல இன மக்களின் எண்ணங்கள் அனைத்தும் ஒருங்கே இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

"நான்கு வகைப்படும் வேதங்கள் உலகின் மிகப்பழைமையான ஆவணம் ஆகும். இவைகளே இந்தியத் தத்துவத்தின் ஊற்றுக்கண்கள்" என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதங்களில் அகிம்சை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன என்பதற்கு ஆசிரியர்கள் சான்றுகள் பலவற்றைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள்.

பல்வேறு நாட்டுத் தத்துவங்கள் அணி அணியாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இரக்கம் என்ற உணர்வே மதத்திற்கு அடிப்படையானது என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளும் வண்ணம் ஆசிரியர்கள் விவரித்திருக்கின்றனர். மத நல்லிணக்கத்திற்கு இந்த அடிப்படை உண்மை பேராதரவாக இருக்கிறது.

இந்தியாவைப் பொருத்தவரை அகிம்சை என்ற உணர்வு மிகப்பழங்காலம் முதல், மக்களின் அன்றாட வாழ்வில் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை என்பதனை இந்நூல் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்கின்றது.

சமணத் தீர்த்தங்கரர்களின் வாழ்க்கைத் தத்துவங்கள் காட்டும் உண்மையும் பௌத்த மத அடிப்படை உண்மைகளும் எவ்வாறு காந்தியடிகளின் வாழ்க்கையில் பிரதி பலித்து அவர் வாழ்நாள் முழுமையிலும் அகிம்சையைப்

பின்பற்றிய தோடு மட்டுமல்லாமல் நாட்டு மக்களையும் அவ்வழியிலேயே வழிநடத்தினார் என்பதையும் இந்நூல் காட்டுவது உலகநாடுகள் அனைத்திற்கும் ஒளியூட்டும் கருத்தாக இருக்கிறது.

அறநெறிக் கல்வி, மதிப்புசார்ந்த கல்வி (Value Education) ஆகியவை தற்போது வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஏனென்றால் பள்ளி, கல்லூரிகள் கல்லூரி நிறுவனங்களில் அதற்கெனத் தனிப் பாட வேளையை ஒதுக்கி அதை ஆழமாகக் கற்பிக்கும் வழக்கம் தற்போது இல்லை. பண்டைநாளில் அறநெறிக்கல்வியைக் கற்பித்த பின்னரே, ஏனைய கல்விப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பாடத்திட்டமும் பாடச்சுமையும் கூடிவிட்ட இன்றைய நிலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடங்களை முடித்தால் போதும் என்ற அவசர நிலையில் இருக்கின்றனர்.

மாணவன் தேர்வில் தோல்வி கண்டால் மீண்டும் தேர்வு எழுதி வெற்றி காணமுடியும். தேர்வில் தோல்வியடைதல் என்பதனைப் பொருட்படுத்த வேண்டியது இல்லை. தேர்வில் தோல்வி கண்டவர்கள் தலைவர்களாகவும், பெரிய பதவிகளிலும் இருக்கின்றார்கள். ஆனால், ஒழுங்கு நாகரிகம் இவற்றில் தவறும் நிலை மாணவனுக்கு ஏற்படின் அது அவன் வாழ்நாள் முழுமையிலும் பின்னடைவை ஏற்படுத்தும். எனவே மாணவர்களைத் தலைமைப் பண்பு உள்ளவர்களாகவும், ஒழுக்கம் நிறைந்த பண்பாளர்களாகவும் உருவாக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அத்தகைய மாணவர்க்கு இந்நூல் ஒரு வழிகாட்டி.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உள்ள இடத்தில் வளர்ச்சிக்குக் கால்கோள் விழா எடுக்கப்படுகிறது என்று

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளைப் படிக்கும் போது மாணவர்களும் மற்றவர்களும் பயில வேண்டிய இன்றியமையாத தத்துவம் இது என்பதை உணர்கிறேன்.

அனைத்து மதங்களைப் பற்றிய கருத்துக்களையும் படிக்கும் போது அவற்றின் அடிப்படை உண்மை எவ்வாறு ஒன்று போலவே இருக்கின்றது என்பதை இந்நூலின் வாயிலாக யாரும் புரிந்து கொள்ள முடியும். மேலும் உலகத்தத்துவ ஞானிகள் எவ்வாறு ஒருமித்த கருத்து உடையவர்களாகத் திகழ்கின்றார்கள் என்பதும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நூல் மாணவர்க்கு வழிகாட்டி. அறிஞர்க்குத் தத்துவவிருந்து. துறவியர்க்குக் கையேடு. அனைவர்க்கும் இரக்கத்தின் ஆழம் காட்டும் அளவுகோல்.

இத்தகைய நூலைப் படைத்த கல்வியாளர்கள் இருவரும், மேலும் கல்விக்குப் பயன்படும் இது போன்ற நூல்களை எழுதி அறிவு உலகின் எல்லையை விரிவாக்க வேண்டும் என உளமார விரும்பிப் பாராட்டுகிறேன்.

டி. சுதந்திராதேவி

1. வேதங்கள் உணர்த்தும் அகிம்சை

பழைமை வாய்ந்த வேதநூல்களில் "அகிம்சை" என்பதற்குத் தலையாய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிஞர்களில் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. டி.டபிள்யு. ரைஸ் டேவிட் என்னும் அறிஞர் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார் :

"வேதங்களிலும், சில உபநிடதங்களிலும் அகிம்சை என்பது குணங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே யன்றி, அதற்குத் தலையாய இடம் கொடுக்கப்படவில்லை. அகிம்சையே தலையாயது என்னும் உச்சநிலை வழங்கப்படவில்லை."

சாந்தோகியோபநிடதம் கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இந்த உபநிடதத்தில் தான் முதன்முறையாக அகிம்சையைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதாக டி.டபிள்யு. ரைஸ் டேவிட் குறிப்பிடுகின்றார். ஓரளவு இது ஏற்கத்தக்கது எனலாம்.

அகிம்சை என்பதற்கு மிகத் தெளிவான உயர்ந்தபட்ச நிலை நமது வேதங்களில் அளிக்கப்படவில்லை என்பதனை ஓரளவிற்கு ஏற்கலாம். அகிம்சை என்பதனை ஒளிசிந்தும் வயிர அட்டிகை என்றால், அந்த அட்டிகையின் ஒளி தீட்டப்பட்ட வயிரத்தின் ஒரு சிறிய பகுதியையே வேதங்கள் காட்டியிருக்கின்றன என்றே கருதத் தோன்றுகிறது. மனிதனுக்குள்ளே சுடர்விடும், அவனது உள்ளிடு கருத்தாக

இருக்கிற அகிம்சை என்பதனை நோக்கி அவ்வேதங்கள் இட்டுச் செல்கின்றன என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

பல நூற்றாண்டுகளாக, வேதத் தத்துவங்களானவை, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் மீது மட்டுமல்லாமல், அனைத்துலக மக்களின் மீதும் பெரும் தாக்கதினை ஏற்படுத்தியிருக்கின்றன.

நான்கு வகைப்படும் வேதங்கள் உலகின் மிகப் பழைமையான ஆவணம் ஆகும். இவைகளே இந்தியத் தத்துவத்தின் ஊற்றுக் கண்கள்.

வேதங்கள் இறைவனிடம் மன்றாடுதல்

வேதங்கங்களில் முதலாவதாக அமைந்திருப்பது ரிக் வேதம் ஆகும். கடவுளையும், கடவுளின் வடிவமாக இருக்கும் சிறுதெய்வங்களையும் நோக்கி நமது வழிபாட்டையும் வேண்டுகோளையும் தெரியப்படுத்தும் முறையில் ரிக்வேதம் அமைந்திருக்கிறது.

இவ்வேதத்தின் பத்தாம் மண்டலத்தில் கீழ்க் குறித்தவாறு குறிப்பிடப்பட்டுள்ளது :

"உலகத்தைத் தோற்றுவித்தவராகிய இறைவர் நீதியானவர்; அவரே சொர்க்கத்தையும் தோற்றுவித்தார்; அவரே ஒளியையும் சக்திபடைத்த நீர்ப் பரப்பையும் தோற்றுவித்தார். அவர் எங்களைத் துன்பம் அணுகாமல் காப்பாராக. எங்களது தியாக உணர்வை அத்தகு இறைவனுக்கே அர்ப்பணிக்கின்றோம்".

மேற்குறித்த சுலோகத்தில் "துன்பம் அணுகாது" என்ற சொல்லும் "எங்களை" என்ற சொல்லும் குறிப்பிடதகுந்தவை. துன்பம் அணுகாது என்பது இம்சையின் ஒருபகுதி ஆகும்.

உடலுக்குக் காயம் ஏற்படுத்துவது மட்டும் அன்றி, உள்ளத்து உணர்வுகளுக்கு ஊறு ஏற்படுத்துவதும் "இம்சை" என்பதில் அடங்கியிருக்கிறது. யாருக்கும் எவ்விதத் துன்பமும் ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று இறைவனிடம் மனிதன் மன்றாடும் போது, "இம்சை" கூடாது என்ற அவனது எண்ணத்தையே அது வெளிப்படுத்துகிறது. துன்பம் இல்லாமல் இருக்கும் நிலையை, மனிதன் தனியொருவனாகத் தனக்கு மட்டும் அன்றி, ஒட்டுமொத்தச் சமுதாயக் குழுவிற்கான பிரார்த்தனையாக இறைவனிடம் வைக்கின்றான் என்பதையே மேலே சுட்டிக்காட்டப் பட்ட "எங்களுக்கு" என்ற சொல் எதிரொலிக்கிறது. பொது நலம் கருதும் மனிதனின் உயர்ந்த எண்ணத்தை இது காட்டுகிறது. அகிம்சையின் குணங்களில் இதுவும் ஒன்றாகும்.

துன்பங்களிலிருந்து மனிதன் விடுபட விரும்புதல்

துன்பங்களிலிருந்து மனிதன் விடுபட வேண்டும் என்பதையும், சோகங்களிலிந்து விலகிச் செல்ல ஆசைப்படும் அவனது "அகிம்சை" பற்றிய எண்ணங்களையும் ரிக்வேதம் கூறுவதனை மேலும் காண்போம்

"நான் இப்போது அடைக்கலத்தையும், பிறர் தரும் அணைப்பையும் பெற்றுக்கொள்ள இயலும். அடைக்கலமும் அன்பும் தருபவனே "மித்திரன்". இவ்வாறு மித்திரன் என்று அழைக்கப்படுகின்ற, என்னை நேசிக்கின்ற அவர் காட்டும் பாதையில் நான் செல்ல முடியும். எங்களுக்கு ஒரு போதும் எவ்வித இடையூறும் விளைவிக்காத, அன்பு கெழுமிய இந்த நண்பனின் பொறுப்பில் நாங்கள் மிகக் பாதுகாப்பாகச் செல்ல இயலும்."

இந்த சுலோகத்தில் கூறப்பட்டவற்றை நன்கு ஆராய வேண்டும். சாமானியர்களுக்குப் பாதுகாப்புத் தருதல் என்பது, அகிம்சையின் ஒரு கூறு ஆகும். துன்பத்தையும் அவதியையும் உண்டாக்குகின்ற, எல்லாவிதமான கொடூரச் செயல்களிலிருந்தும் விடுபட்டு விலகிச் செல்லவேண்டும் என்ற மானிட விருப்பத்தினை மேற்குறித்த சுலோகம் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

இயற்கை எய்தி வான் உலகில் உள்ள முன்னோர்கள், மக்கள் அறியாமல் செய்த பிழைகளை மன்னிப்பதோடு மட்டும் அல்லாமல், வாழையடி வாழையெனத் தமது வழியில் வந்த அம்மக்கள் குலத்தைப் பாதுகாத்து வாழ்த்துவதாகவும் தத்துவங்கள் கூறுகின்றன இத்தகைய முன்னோர்களை அழைத்து,

"எங்கள் தந்தையரே! மனிதனுக்கே உரிய குற்றம் செய்யும் குணத்தின் காரணமாக, உங்களுக்கு எதிராக ஏதேனும் தவறு இழைத்திருப்பின் அதற்காக எங்களைத் தண்டித்து விடாதீர்கள் " என்று விண்ணப்பிக்கும் முறை ரிக்வேதத்தில் காணப்படுகிறது.

உருத்திரன் அல்லது சிவனின் செயல், உலகை அழித்தல் ஆகும். அதிலிருந்து தப்பித்தல் என்பது வாழ்க்கையைத் தொடருதல் என்பதாகும்.

"உருத்திரரே, எங்களைத் துன்புறுத்தி விடாதீர் !
சிறியவர்களாகவும், பெரியவர்களாகவும் இருக்கிற
எங்களை அழித்து விடாதீர் !
வளர்ந்தும் வளராமலும் இருக்கிற
எங்களை அழித்து விடாதீர் !

எங்களிடையே இருக்கின்ற
தாயையும் தந்ததையும்
துன்புறுத்தி விடாதீர் !
எங்களுக்குச் சொந்தமாக இருக்கிற
உடம்பை அழித்து விடாதீர்"!

என்பது அழிக்கும் கடவுளான உருத்திரனை நோக்கி ரிக்வேதம் வழிபடுகின்ற பாடலாகும்.

உருத்திரன் அவனுக்கே உரிய வெம்மையைக் காட்டிவிடாமல், தண்மையையும் பாதுகாப்பையும் அனைத்து உயிர்களிடமும் அவன் காட்டவேண்டும் என்று அவனிடம் மன்றாடி வேண்டுவதையே இப்பாடல் காட்டுகிறது.

மனிதன் அழிவையும் கொடூரங்களையும் விரும்பவில்லை என்பதையும், அமைதியான வாழ்க்கையையே அவன் நாடுகிறான் என்பதையும் மேற்கூறிய பாடல் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

சமுதாய நலநோக்கில் அமைந்த ரிக்வேதப் பாடல்

ரிக்வேதத்தில், சமுதாயநல நோக்கில் அமைந்த மற்றொரு வழிபாட்டுப் பாடலையும் காணலாம்:

"யாரும் அழிய வேண்டாம்;
யாரும் காயப்பட வேண்டாம்;
படுகுழியில் வீழ்ந்து அவன்
ஊறுபட வேண்டாம்;
எனவே அனைவரும் எவ்வித

இடையூறும், காயமும் இன்றித்

திரும்பி வந்தடைவீர்களாக!"

இந்தப் பாடலிலும் அகிம்சை என்ற தத்துவத்தின் எதிரொலியையே கேட்கின்றோம்.

உடல்நலம்,மருத்துவம் ஆகியவற்றைப் பேசும்
அதர்வண வேதம்

அதர்வண வேதம் என்பது உடல்நலம் மருத்துவம் ஆகியவற்றைப் பேசுகிறது.

நோவுகள் இல்லாத நலம்மிக்க நலவாழ்க்கையை மனிதன் விரும்புவதைக் கீழ்க் குறித்த அதர்வண வேதப் பாடலால் அறிய முடிகிறது.

"உறுதி வாய்ந்த சொற்களை எனது

வாய்க்கு வழக்குக!

தெளிந்த மூச்சினை எனது

மூக்கிற்குத் தருக!

கண்களுக்கு ஒளியினை வழங்குக!

எனது தலை முடிக்கு

நரை வந்துவிட வேண்டாம்;

எனது பற்கள் சிதைந்துவிடாமல்,

ஆடாமல் உறுதியாக இருக்கட்டும்;

எனது கைகளுக்குச் சக்தியை வழங்கிடுக!

எனது தொடையின் தசைகள்

முறுக்கேறியவை யாகட்டும்!
எனது கால்கள் எழுந்து செல்ல
உயிர்ப்பு வழங்குக!
எனது பாதங்கள் விரைந்து
செல்வதற்கு ஏற்றவையாக
அருள்புரிக!
என்னுடன் இருப்பவர்கள் துன்பமின்றி
இன்புற்றிருப்பாராக!
உயிர்கள் அனைத்தும் ஊறுபாடு இன்றித்
தழைத்திட அருளுக!"

அதர்வண வேதத்தில் அமைந்துள்ள மற்றொரு வழிபாட்டுப் பாடலையும் இங்கே பார்ப்போம் :

"என் நண்பனைப் பற்றி
நான் அச்சப்படாது இருக்க வேண்டும்;
என் பகைவனிடமும் எனக்கு
அச்சம் ஏற்படக் கூடாது;
தெரிந்தவர்கள், தெரியாதவர்கள்
ஆகிய எவரிடத்திலும் எனக்கு
அச்சம் ஏற்படக் கூடாது;
எமக்கு உடைமையான இரவுகள்
அச்சமின்றிக் கழியட்டும்

அங்ஙனமே பகற்பொழுதுகளும்
அச்சமின்றி இருக்க வேண்டும்;
எல்லாத் திசையில் இருப்பவர்களும்
நண்பர்களாகவே அமைய வேண்டும்."

அச்சம் இல்லாமையும், உயிருடன் உயிர் கலந்தாற் போன்ற இனிய நட்புணர்வும் அகிம்சையின் பண்புகளே. இப்பண்புகளை வேண்டி விழையும் மனிதனின் சிந்தனையை மேலே கூறப்பட்ட அதர்வணவேதப் பாடல் சுட்டிக்காட்டுகிறது.

யசூர் வேதத்தில் அமைந்துள்ள நட்புணர்வு

யசூர் வேதத்தில் அமைந்துள்ள சுலோகம் (36:18) ஒன்றில் அனைத்துலகமும் நட்பில் தழைக்க வேண்டும் என அவாவுகின்ற ஆசை வெளிப்படுகின்றது. அச் சுலோகத்தின் கருத்து வருமாறு :

"உலகத்து மக்கள் எல்லாம் என் மீது
நட்புப் பார்வையோடு பார்க்கட்டும்!
நானும் அதனைப் போலவே
உலகத்து மக்களை எல்லாம்
நட்பு நிறைந்த பார்வையோடு
காணவேண்டும்!
மேலும் நாம் ஒருவரை யொருவர்
பார்த்துக் கொள்ளுகிற போது

இந்த நட்புப் பார்வையிலிருந்து
சிறிதும் விலகாமல் நம்மை
இணைக்கும் பாலமாக இந்த
நட்புப் பார்வை அமைய வேண்டும்!

மேலே கண்ட சுலோகம் மூன்று பொருள்களை வலியுறுத்துகிறது.

1. மற்றவர்கள் தன்னை நட்புடன் நடத்த வேண்டும் என்று மனிதன் விரும்புகிறான்
2. மற்றவர்களும் அதே நட்புணர்வை விரும்புகிறார்கள் என்பதை அவன் புரிந்து கொள்கிறான். அதனால் எல்லா மனிதர்களையும் நட்புணர்வோடு நடத்த விரும்புகிறான்.
3. இதன் காரணமாக ஓர் அறநெறி உருவாகின்றது. இந்த அறநெறியின் காரணமாக மற்றவரை நட்புப்பார்வையோடு பார்க்க வேண்டும் என்ற அடிப்படை தோன்றுகிறது. இது அனைத்துலக நட்புணர்வை எதிரொலிக்கின்றது. இது அகிம்சையின் ஒரு கூறு ஆகும்.

வழிபாட்டின் மூலம் சாதனை

இம்சை அல்லது கொடுமை என்பதிலிருந்து துன்பப்படுதல், வேதனைப் படுதல் காயப் படுதல் ஆகியவை தோன்றுகின்றன. இவற்றிலிருந்து எப்போதும் மனிதன் தப்பித்துக் கொள்ளவே விரும்புகின்றான் என்பதனை மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் உணர்கின்றோம். மனிதன் இவற்றை வழிபாட்டின் மூலம் சாதிக்கக் கருதுகின்றான்.

வேதகாலச் சூழலைச் சரியாகப் படம் பிடிப்பது என்பது மிகக் கடினமானது. வேத காலத்தில் வாழ்க்கை இனிமையானதாக இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. ஏனெனில் மக்கள் தமது வாழ்க்கைக்காக, பேராற்றல் படைத்த இறைவனின் துணையை நாடியுள்ளனர். இதன் காரணமாகவே தெய்வத்தன்மையை அவர்கள் பெரிதும் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது எனலாம்.

தெய்வத் தன்மை என்பதும், அகிம்சை என்பதும் தனித்தனியே பிரித்துப் பார்க்க இயலாத ஒன்றே தான் என்பது உண்மையாகும். ஒன்றாக இருக்கும் இவ்விரண்டையும், விடாப்பிடியான ஒன்றிப் போன ஒரே உணர்வுடன் இருப்பதால் அடைந்துவிட முடியும் என்பதனைப் பழம் நூல்கள் வலியுறுத்துகின்றன. இது வடமொழியில் "சாதனா" என்று குறிக்கப்படுகின்றது.

"சாதனா" என்பதனைச் சாதாரண மக்கள் அடைவதற்கு மிக எளிமையான வழி பக்தி மாக்கம் என்று கூறிய பழங்காலத்து அறிஞர்கள் அதிலேயே மிகுந்த கவனமும் செலுத்தினர். அதனாலேயே இறைவனையும், தமது முன்னோர்களையும் நோக்கி, தம்மீது அருள் செய்யும் படியாகவும், கொடூரங்களிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றும் படியாகவும் இறையருட் பாடல்களை பாடினார்கள். அப்பாடல்களால் இறைவனின் அருள் ஆசியைப் பெற விரும்பினார்கள். அகிம்சை அல்லது இனிமையான வாழ்க்கையைப் பெறுவதற்குச் "சாதனா" என்பது ஒன்றே ச்ரியான வழியென்று கண்டனர். "சாதனா" என்பதனை இந்திரிய நிக்கிரகம் என்று கூறலாம். இந்திரிய நிக்கிரகம் என்பது புலனடக்கம் ஆகும். முப்பால் அமுதம் தந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்," அடல் வேண்டும்

ஐந்தன் புலத்தை" என்று அருளிச் செய்தார். இதற்கு ஏற்ப மெய்வாய்கண் மூக்குச் செவி என்னும் ஐந்து புலன்களையும், அவை ஆசைப்பட்டுச் செல்லும் வழிகளில் தறிகெட்டுச் சென்றுவிடாமல் அவற்றைச் சரியான திசையில் செல்லவிட்டு இறையருள் ஆற்றலை மேம்படுத்தி, வாழ்க்கையில் எண்ணிய எண்ணியாங்கு எய்துதலே "சாதனா" ஆகும். மகாபாரதத்தில் வருகின்ற ஒரு கதையை இங்கே குறிப்பிடுவது பெரிதும் பொருத்தமானதாகும்.

மாமன்னராக வீற்றிருந்த விசுவாமித்திரர் தவம் செய்வதற்காகத் தமது அரசு பதவியைத் துறந்தார். கடுந்தவம் புரிந்து, தவ ஆற்றலை அவர் பெரிதும் பெற்றார். இதனால் அவர் மகரிசி என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். ஆனால் வசிட்டர் மட்டும் அவரை ராசரிசி என்றே எப்போதும் அழைத்து வந்தார். இதனால் விசுவாமித்திரருக்குப் பெருங்கோபம் ஏற்பட்டது. வசிட்டர் அங்ஙனம் அழைத்த செயல் அவர் மனத்தைச் சுட்டது. தமது தவ வலிமைக்குக் களங்கம் ஏற்படும் வகையில், ராசரிசி என்று தம்மை அழைக்கின்ற வசிட்டர் மீது கடுங்கோபம் கொண்ட விசுவாமித்திரர் அவரைக் கொல்வது என்று தீர்மானித்தார். வசிட்டருடைய ஆசிரமம் நோக்கிச் சென்றார். வசிட்டர் உறங்கும் போது அவரைக் கொல்வதற்காக அவரது குடிலின் பின்புறத்தே மறைந்திருந்தார். அது ஒரு முழுநிலவு நாள். வசிட்டரும் அவருடைய மனைவி அருந்ததியும் குடிலின் வெளிப்புறத்தே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். விசுவாமித்திரர் அவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார். அருந்ததி, "இந்த நிலவு எவ்வளவு பேரழகு படைத்ததாக இருக்கிறது, பாருங்கள்" என்று கணவராகிய வசிட்டரை நோக்கிக் கூறினாள். வசிட்டர் பதிலுரைத்தார்:

"இந்த நிலவு மிகவும் அழகாக ஒளிவிடுகிறது. விசுவாமித்திரர் பெரிதும் தவம் செய்கின்றார். தவத்தின் காரணமாக ஒளிவிடுகின்றார். அவர் தவத்தால் ஒளிவிடுவதைப் போலவே இந்த நிலவும் ஒளிவிடுகின்றது" என்று கூறினார்.

மறைந்து நின்றிருந்த விசுவாமித்திரருக்குச் சுருக்கென்றது. தம்மைப் பற்றியும், தமது தவத்தைப் பற்றியும் மிக உயர்வான எண்ணம், கொண்டுள்ள, வசிட்டரின் உயிரைப் பறிக்க நினைத்தோமே என்று வெட்கத்தால் மனவாட்டம் அடைந்தார். வசிட்டரின் உயிரைப் பறிக்க எண்ணி வைத்திருந்த உடைவாளை உடனே வீசி எறிந்தார் வசிட்டரின் எதிரே சென்றார். அவரைப் பணிந்து வணங்கினார்.

வசிட்டர் விசுவாமித்திரரை வரவேற்றார். மகரிசி விசுவாமித்திரரே இந்த நள்ளிரவு வேளையில் தாங்கள் எனது ஆசிரமக் குடிலுக்கு வந்த காரணம் யாதோ?" என வினவினார்.

"உங்களைக் கொல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன்" இங்கே வந்தேன் என்று கூறிய விசுவாமித்திரர், "வசிட்ட முனிவரே தாங்கள் எப்போதும் என்னை "ராசரிசி" என்றே அழைப்பீர்கள் இன்றைய தினம், "மகரிசி" என்று அழைத்தன் காரணம் யாதோ ?" என்று வினவினார்.

வசிட்டர் பின்வருமாறு பதிலுரைத்தார்: "விசுவாமித்திரரே இன்றைய தினம் உமது சாதனை முற்றுப் பெற்றது. என்னைக் கொல்ல வேண்டும் என்று வந்தீர்கள். ஆனால் நீங்கள் மறைந்திருந்த போது நான் பேசிய பேச்சைக் கேட்டீர்கள். எனது பேச்சின் காரணமாக உங்கள் உள்ளத்தில்

முற்றியிருந்த கொடூரமான பொறாமை மிகுந்த எண்ணங்களிலிருந்து விடுபட்டு விட்டீர்கள், உங்கள் உள்ளத்தில முற்றியிருந்த பகைக்கனலை அவித்துவிட்டீர்கள் கோபம், பழி வாங்கும் எண்ணம் ஆகியவற்றை விட்டு விட்டீர்கள். இன்றைய நாளில்தான் உங்களை நீங்கள் ஒரு உண்மையான துறவியாக உயர்த்திக் கொண்டுவிட்டீர்கள் அதனால் தான் இன்றைய தினம் உங்களை நான் "மகரிசி" என்று அழைத்தேன் என்று வசிட்டர் கூறினார்.

தீய உணர்வுகளை வென்று, அவற்றிலிருந்து விடுபடும்போது தெய்வத்தன்மையை ஒருவர் அடையமுடியும் என்பதனை மேலே கூறப்பட்ட கதையிலிருந்து மிகத் தெளிவாக உணர முடியும்.

வேதங்கள் நன்கு ஆராயப்பட்டு, பகுத்துப் பார்க்கப்பட்டு, "வேதத்தத்துவம்" என்பது உருவாக்கப்பட்ட காலத்தில், பின்வரும் உண்மை தெளிவுறுத்தப் பட்டது : அகிம்சை என்பது தெய்வத்தன்மை என்பதில் உள்ளடங்கி இருக்கும் குணம். அது வேதத்தில் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும், அதற்கு வேதத்தில் ஓர் உயர்ந்த நிலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகின்றது.

காலவெள்ளத்தின் காரணமாக அகிம்சை என்பதைப் பற்றி வேதத்தில் கூறப்பட்டவைகள் மறைந்திருக்கலாம், அல்லது அகிம்சை என்பதைப் பற்றி அலசி ஆராய அக்காலத்தில் அவசியம் இருந்திருக்காது என்றும் கூறலாம்.

உபநிடதம் கூறும் பத்துவகைத் தரும நெறிகள்

"சாந்தில்யோபநிடதம்" மனிதன் பின்பற்ற வேண்டிய பத்து வகையான தரும நெறிகளை வகுத்தளிக்கிறது. அகிம்சை என்பதற்கே இந்த அறநெறிகளில் முதன்மையான

இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்து வகையான தருமநெறிகள் வருமாறு:

1. அகிம்சை, 2. உண்மை பேசுதல், 3. திருடாமை, 4. பிரமசரியம், 5. பொறுமை, 6. நேர்மை, 7. மன்னித்தல், 8. சகிப்புத் தன்மை, 9. நல்லுணவுப் பழக்கம், 10. தூய்மை.

இந்த அறங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால், இக்குணங்கள் அனைத்தும் அகிம்சை என்ற தத்துவ அடித்தளத்திலிருந்து பிறந்தவைகளே என்பதை உணர முடியும். "அகிம்சை" என்ற அணுவின் துகள்களே மேற்கூறப்பட்ட அறநெறிகள் என்பதையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

மேலே கூறப்பட்ட உபநிடதத்தில் அகிம்சையின் பயன் என்ன என்பதைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. துன்பத்திற்கு இட்டுச் செல்லும் எண்ணம், சொல், செயல் ஆகிய நிகழ்வுகளை ஒதுக்கித் தள்ளுதலே அகிம்சையின் பயன்பாடு ஆகும்.

சந்தோக்கிய உபநிடதம்

சந்தோக்கிய உபநிடதமானது, "தவம், கொடை, நம்பிக்கை, அகிம்சை, உண்மை" என்று நற்குணங்களை வரிசையாக எடுத்துரைக்கின்றது. இவற்றில் அகிம்சை என்பது இடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. வீடுபேறு அடைவதற்குரிய தெய்வீகத் தவத்தில் அகிம்சை இன்றியமையாததாக இருக்கிறது.

சந்தோக்கிய உபநிடதம் மேலும் பின்வருமாறு கூறுகிறது. "எவன் ஒருவன் தனது புலன்களைத் தன்னை நோக்கி, உள்முகமாக அடக்கியாள்கிறானோ, எவன் ஒருவன்

எவ்வுயிரையும் தன் உயிர் போல் கருதுகின்றானோ, எவன் ஒருவன் மேற்கூறியவாறு தனது வாழ்நாள் முழுமையும் நடந்து கொள்கின்றானோ அவன் பிரம்ம உலகத்தை அடைவான். அவன் பெறற்கரிய பேற்றினைப் பெற்று மகிழ்வான்."

மனு என்பார் அகிம்சை என்பதனைக் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார் :

"தான் இன்பம் பெறுவதற்காகப் பிறிதொரு உயிருக்கு துன்பம் விளைவிக்கின்றவன் இருக்கின்றபோதும் இறந்த போதும் எத்தகைய இன்பமும் பெற இயலாது. பிற உயிரை மகிழ்விப்பவன் எல்லையற்ற இன்பத்தினைப் பெறுவான். எந்த ஒரு உயிருக்கும், துன்பம் கொடுக்காதவன், அவன் நினைக்கும் இன்பங்களை எவ்வித முயற்சியும் இன்றி பெற்றுக் கொள்வான்."

மேலும் மனு கூறுவதாவது :

"விலங்குகளைக் கொல்ல அனுமதிப்பவர்களும், அதனை விற்பவர்களும், அதனைச் சமைப்பவர்களும், அதனை உண்பவர்களும் அவ்விலங்குகளைக் கொன்றவர்களே ஆவர்" எனவும் மனு கூறுகின்றார்.

யோக தத்துவத்தின் மூல முதலானவர் என்ற புகழப்படுபவர் பதஞ்சலி என்பவர். யோக தத்துவம், வேதத்தின் இன்றியமையாத கிளை ஆகும். இத் தத்துவம், அகிம்சை அல்லது கொல்லாமையை, "யோகியின் மகா விரதம்" என்று குறிப்பிடுகின்றது. இந்த மகா விரதமே, யோகியின் தலைசிறந்த உறுதிப்பாடு எனவும், மெய்யுணர்வின் தலையாய ஒழுக்கம் எனவும் பதஞ்சலி யோகம் குறிப்பிடுகின்றது.

எல்லா உயிர்களுக்கும் எல்லா நேரங்களிலும் எவ்விதத் துன்பமும் விளைவிக்காமல் இருப்பதே அகிம்சை என இதற்குப் பதஞ்சலி விளக்கமும் அளித்துள்ளார். மேலும் பதஞ்சலி கூறுவன :

"அகிம்சையைப் கடைப்பிடிப்பவனுக்குப் பகைவர் இருப்பது இல்லை. வெறும் சொற்களால் இம்சையைக் கண்டிப்பது மட்டுமே அகிம்சை ஆகிவிடாது. மனத்தாலும் சொல்லாலும் செயலாலும், இயற்கைச் சுற்றுச் சூழலுக்கு எவ்வித ஊறும் விளைவிக்காமல் இருப்பதே அகிம்சை யாகும்."

மகாபாரதத்தின் ஒரு பகுதியாக அமைந்திருப்பது பகவத் கீதை. பகவத் கீதை என்பது கிருட்டின பரமாத்மாவின் செய்தி உரை ஆகும். இதில் கூறப்பட்டிருப்பது :

"ஒருவனின் விருப்பத்திற்கு எதிர் மாறாக இடையூறு செய்வதும் இம்சையே. பிறருக்கு இடையூறு விளைவிக்கத் தூண்டுவதும் அவ்வாறான செயல்களுக்கு ஆதரவு அளிப்பதும் இம்சையே. இம்சை மிகக் கொடிய பாவம் அகிம்சையே அறத்தின் உயர்நிலை".

மேலும் மகாபாரதத்தில் அனுகசன பருவம் என்ற பகுதியில் "அகிம்சையே சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான தலைசிறந்த ஊடகம் எனவும், அகிம்சை என்பது சிறந்த அறநெறி மட்டுமன்றிச் சமுதாய உயர்வை ஏற்படுத்துவதற்கான அடித்தளமும் அதுவே" என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இராமயணத்தில் பல இடங்களில் அகிம்சையே தலைசிறந்த ஒழுக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதுகாறும் மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அகிம்சை என்பது தலைசிறந்த வேத தத்துவம் என்பது புலனாகின்றது. வேதங்கள், உபநிடதங்கள், வேதம் தொடர்பான ஏனைய 108 நூல்கள், புராணங்கள் ஆகிய அனைத்தும் அகிம்சை என்பது தவிர்க்க இயலாத இன்றியமையாத தத்துவம் என்பதை நிலைநாட்டுகின்றன.

சமணத்தின் முடிந்த முடிபு அகிம்சையே

சமணத் தத்துவங்ககளைப் பகுப்பாய்வு செய்தற்குப் பல வழிமுறைகள் இருக்கலாம். சமணக் கொள்கைகளை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி அறிஞர் கீழைநாடு அல்லது மேலை நாடு ஆகியவற்றுள் எந்த நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் ஒரேயொரு ஆய்வு முடிவைத்தான் கூற இயலும். சமணக் கொள்கைகளின் முடிந்த முடிபு யாது எனில் அகிம்சை என்ற ஒன்றுதான். சமண மதத்தின் மையக்கருப்பொருள் அகிம்சை என்பதே ஆகும்.

அகிம்சையைச் சென்று சேர்வதற்குரிய வழிநிலைகள், அடைய தருந்தனவா அல்லது அடைய இயலாதனவா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மகா வீரரும், ஏனைய சமணத் தீர்த்தங்கரர்களும் உபதேசித்தவைகளைச் சாதாரண மனிதனும் நூற்றுக்நூறு பின்பற்ற முடியும் என்பதே சமண மதத்தின் எதிர்பார்ப்பு ஆகும். சமணத் தத்துவங்களின் சிகரமாக இருப்பது அகிம்சையே ஆகும். அதனை எய்துவதனை "பிரம்மன்" என்று கூறுகின்றனர். இது குறித்த சமணப் பாடல் "அகிம்சை என்பது அனைத்து உயிர்களுக்கும் இன்பமானதும், உயிர்களை அமைதிப்படுத்துவதும் அகிம்சையே. அதுவே பிரம்மனாகும்" என்று குறிப்பிடுகின்றது.

அகிம்சையே அழிவற்ற சட்டம்

சமண மதமும், சமண நூல்களும் அகிம்சை என்பதற்கு மிக உயரிய இடத்தை அளித்துள்ளன. சூத்திர கிரங்கா என்ற நூலில் அகிம்சையின் முக்கியத்துவம் நன்கு விளக்கப்படுகின்றது. அகிம்சை என்பதன் முதல் பாடம் இதன் நான்காவது போதனைச் சூத்திரத்தில் இடம் பெற்றுள்ளது. இச்சூத்திரத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது :

இறப்பு, நிகழ்வு எதிர்வு ஆகிய மூன்று காலங்களிலும், கீழ்குறித்தவாறு கூறவும், பேசவும் பிரகடனம் செய்யவும், விளக்கவும் இச்சூத்திரத்தில் அறிவிக்கப்படுகிறது. அது யாதெனில், மூச்சு விடுபவை, இருப்பவை, வாழ்பவை, ஆகிய அனைத்து உயிர்களையும் கொல்லக் கூடாது அல்லது இம்சைப் படுத்தகூடாது அல்லது துரத்தி நீக்கி விடக் கூடாது. எல்லா நிலைகளாலும், எல்லா இடங்களிலும், எல்லா உயிர்களுக்கும் எவ்வித ஊறுபாடும் செய்யக் கூடாது என்பதே சமணமதத்தின் அறிவுரைகளின் சுருக்கமாகும். வேறு வகையில் கூற வேண்டுமெனில் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் பிற உயிர்களுக்கு இம்சை செய்வதிலிருந்து முற்றிலும் விலகியிருப்பதே எப்போதும் செய்ய வேண்டியது என்று சமணம் கூறுகிறது.

சமண மதத்தின் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர், மகாவீரர். இவர் மட்டுமின்றி இவருக்கு முன்னாலே இருந்த தீர்த்தங்கரர்களும், சமணத்தைப் போற்றிய பிற சான்றோரும் இக்கருத்தையே முற்றிலும் பின்பற்றயுள்ளனர்.

மகாவீரரைத் தொடர்ந்து அருகதம், பாகவதம் ஆகியவையும் அகிம்சை என்பதே தூய அழிவற்ற மாற்ற இயலாத தத்துவம் என்பதைப் பறை சாற்றுவதைக் கீழ்க்குறித்த பகுதியால் உணரலாம் :

கொடுமைக் காரர்களோ, கொடுமையற்றவர்களோ, சமூக உறவை விரும்புகின்றவர்களோ, விரும்பாதவர்களோ எத்தகையவர்களாக இருப்பினும், யாவர்க்கும் உண்மையானது யாது எனில் அகிம்சையே என சமண சமயக் கோட்பாடு வெளிப்படையாக அறிவிக்கிறது. அகிம்சையே தூய்மையானது, மாற்றம் இல்லாதது, அழிவற்ற சட்டம் என உலகைப் புரிந்து கொண்ட பேரறிவு படைத்தவர்கள் மேலே குறிப்பிட்டவாறு பிரகடனப் படுத்தியுள்ளனர்.

மாசுமறுவற்ற முடிவில்லாத அகிம்சை என்னும் சட்டத்திலிருந்து மாறுபடுவதும், அதிலிருந்து வேறுபட்டனவற்றைச் செய்வதும் அறிவுடைமையாகாது, நன்மையாகாது. அகிம்சையிலிருந்து மாறுபடுவது என்பது தீர்த்தங்கரார்கள் காட்டிய வழியிலிருந்தும் அவர்களுடைய அறிவுரைகளிலிருந்தும் ஏன், இன்னும் சொல்லப்போனால் சமண சமயத்திலிருந்தும் மாறுபட்டுப் போவதாகும். இவ்வாறு சமண சமய நெறி எடுத்துரைக்கிறது.

சூத்திர கிருத்தியங்கா என்பது சமணசமயத்தின் புனித நூலாகும். அந்நூலில் அகிம்சையின் அழிவற்ற தன்மை மற்றொரு விதத்தின் கூறப்படுகிறது. "ஒரு மனிதன் உயிர்களைக் கொல்வதை ஒப்புக் கொள்வதாலும் அவனது பாவம் மேலும் வளர்கிறது, என அந்நூல் எடுத்து இயம்புகிறது.

பிற உயிர்க்குத் துன்பம் விளைவித்தலே பாவத்திற்கும், துன்பத்திற்கும் மூலகாரணமாக இருக்கிறது. பகைமைக்குத் தீர்வு காண வழிவகுப்பது அகிம்சையே ஆகும். ஆக்கத்தையும் நன்மையையும் அளிக்கும் முடிவுகளை வழங்குவது அகிம்சை ஒன்றே.

சமண நூல்களின்படி அகிம்சை என்பதே முதன்மையான மகாவிரதம் ஆகும். ஏனைய விரதங்களாவன சத்தியம், ஆஸ்தேயம், பிரமசரியம் மற்றும் அபரிகிரகா என்பவை ஆகும். சத்தியம் என்பது உண்மை பேசுதல், ஆஸ்தேயம் என்பது திருடாமை ஆகும். பிரமசரியம் என்பது காமம் இன்றிப் புலனடக்கம் மேற்கொள்ளல். அபரிகிரகா என்பது ஆசையின்றி இருத்தல்.

இதனைக் குறளும்

"ஒன்றாக நல்லது சொல்லாமை" என்று வலியுறுத்துகிறது.

மேற்குறிப்பிட்ட விரதங்கள் அகிம்சைக்கு உறுதுணையாவன. வாழ்க்கையின் முக்கியத்துவத்தை மேற்கண்ட விரதங்கள் உறுதி செய்கின்றன.

சமணத்தைப் பொறுத்த வரை அகிம்சை என்பது மனிதர்களிடம் மட்டும் அல்லாமல் பிற உயிரினங்களிடமும் காட்ட வேண்டிய ஒன்றாகும். எல்லா உயிர்களும் இறுதிக் கணம் வரை வாழ வேண்டும் என்ற விருப்பத்தையே பெற்றிருக்கின்றன.

தூக்கு மேடைக்குச் செல்ல வேண்டிய கைதியிடம் உலகம் முழுவதையும் உனக்குத் தருகிறேன். அது வேண்டுமா அல்லது உயிரை உனக்குத் தருகிறேன், எது வேண்டும் என்று அவனிடம் கேட்டால் அவன் தேர்ந்தெடுப்பது அவனுடைய உயிராகத் தான் இருக்கும். உயிர் வாழ்தல் என்ற வேட்கை உயிரனங்களுக்கு அத்தகைய உறுதி வாய்ந்ததாகும்.

வாழ வேண்டும் என்ற அசைக்க முடியாத உணர்வு மனிதனிடம் பிறவியிலேயே உள்ளது. இந்த உணர்வு எல்லா

மனிதரிடமும் தொடர்ந்து நிலைபெறுவதற்கு வழியாது எனக் காணலாம். எந்த மனிதனுக்கு நீ துன்பம் செய்யக் கருதுகிறாயோ அந்த மனிதனின் இடத்தில் உன்னை வைத்துப் பார்க்க வேண்டும் . துன்புற வேண்டியவன் நீயாக இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் துன்பத்தையும் இன்பத்தையும் உணர்வது என்ற அனுபவம் எல்லா உயிர்களிடத்திலும் ஒன்று போலவே இருக்கிறது. அந்த அனுபவத்தில் வேறுபாடு ஏதும் இல்லை. வாழ வேண்டும் என்ற அழுத்தமான பிடிப்பும், துன்பத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற உணர்வும் மற்ற உயிர்களிடம் கூட இருக்கின்றது, என்பதை உணர வேண்டும் என்று இரத்தின முனி என்ற சமண முனிவரும் "ஸ்மிருதிகிரந்தா" என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

சமணக் கொள்கைகளின் பிழிவு அகிம்சையே

சமணக் கொள்கைகளைச் சுருக்கி அதன் சாரம் என்று குறிப்பிட வேண்டுமெனில் அது அகிம்சை என்பதேயாகும்.

"மனிதர்களே! உங்களது அன்றாட வாழ்க்கையை அகிம்சை என்ற மைய அச்சினை அடிப்படையாகக் கொண்டே இயக்குங்கள்" என்று சமணம் அனைத்துலக மனிதனை நோக்கி அழைப்பு விடுக்கின்றது.

அகிம்சையின் மிக உயரிய நிலையை மாந்தர் எய்த வேண்டும் என்பதையே சமணம், உள்ளத்திற்குள்ளே ஒளியாகப் பாய்ச்சுகிறது. மகாவீரர் தமது உயிரை இயக்கும் சக்தியாக அகிம்சையை ஏற்றுக் கொண்டார். இந்நோக்கில் பார்க்கும் போது மனிதனின் உயர்வும், தாழ்வும் அவன் எந்த அளவிற்கு அகிம்சையை ஏற்றிருக்கிறான் என்பதைப் பொருத்தே அமையும்.

மகாவீரர், "இந்த உயிரே நண்பன் இந்த உயிரே பகைவன்" என்று குறிப்பிடுகின்றனர். இதன் பொருள் யாதென்றால் அகிம்சையை அணுகி அணுகிச் செல்லும்போது உயிர் தூய்மை பெறுகிறது. அகிம்சையை விட்டு விலகி விலகிச் சென்று, பிற உயிருக்கு இம்சை செய்யும் போது உயிர் அழுக்கடை நின்றது என்பதேயாகும்.

அகிம்சையும் புத்தமும்

பௌத்தத் துறவி மேற்கொள்ள வேண்டிய பத்து வகையான பண்புகள், "சீலங்கள்" என்றே வலியுறுத்தப்படுகின்றன. இவற்றுள் முதலாவது சீலம் உயிர்களைத் துன்புறுத்துவதிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்பதாகும். மேலும் ஒவ்வொரு புத்த மதத்தினனும், உயிர்களைச் சிதைத்தல் கூடாது என்ற கட்டுப்பாட்டின் படி நடந்து கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளது.

புத்த பிட்சுக்களுக்குப் போதிக்கப்படும் பத்து வகையான சீலங்களுள் முதலாவது சீலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்த பிட்சு முன்மொழிய வேண்டிய ஏனைய சீலங்கள்:

1. திருடமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.
2. தூய்மையற்ற எண்ணங்களிலிருந்து விலகியிருப்போன் என்று உறுதி கூறுகிறேன்.
3. பொய் கூற மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.
4. குடிப்பழக்கமானது வளர்ச்சியையும், நற்குணத்தையும் ஊறுபடுத்துவதால் நான் அதிலிருந்து விலகியிருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

5. தவிர்க்கப்பட்ட காலங்களில் உணவு உண்ணமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

6. நடனமாடுதல், பாடுதல், இசை, மேடை நாடகம் ஆகியவற்றில் ஈடுபடமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

7. மாலைகள், வாசனைப் பொருட்கள், வாசகைத் தைலங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த மாட்டேன் என்று உறுதி கூறுகின்றேன்.

8. மிக உயர்ந்த அல்லது மிக அகன்ற படுக்கையைப் பயன்படுத்த மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

9. பொன் அல்லது வெள்ளியைப் பெற மாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

மேலே கூறப்பட்ட இத்தனை உறுதி மொழியையும் புத்தத் துறவி ஏற்றுக் கொண்டு ஒழுக வேண்டும். இதில் முதலாவதாக இருப்பது 'நான் எந்த உயிரையும் சிதைக்க மாட்டேன்' என்று புத்தத் துறவி ஏற்கும் உறுதிமொழி என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தமதம், கருணை என்பதனை மிக உயர்ந்த குணம் என்று வலியுறுத்துகின்றது. கருணையை அடிப்படையாகக் கொண்ட அகிம்சையும் இதனால் மிக உயர்ந்த நிலையைப் பெறுகிறது. கருணை என்பது தயை என்பதனை உள்ளடக்கியிருக்கிறது. அன்பு தயை என்பவையே அகிம்சையை வெளிப்படுத்தும்.

புத்தமதத்தில் கீழே குறிப்பிடப்பட்டவை சீலங்கள் என்று வலியுறுத்தப்படுகின்றன:

1. கொடுக்கப்படாத ஒன்றை ஒருவன் எடுத்துக் கொள்ளக் கூடாது.
2. பொய் கூறக் கூடாது
3. மது அருந்துதல் கூடாது
4. நீதிக்கும், சட்டத்திற்கும் புறம்பாகப் பெண்களுடன் சேரக் கூடாது.
5. இரவில் பொருந்தாத உணவுகளை உண்ணக் கூடாது.
6. மாலைகள் வாசனைப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.
7. தரையின் மீது விரிக்கப்பட்ட பாயில் படுத்தல் வேண்டும்.

உன்னத குணங்கள் என்பவை கௌதம புத்தர் காலந் தொடங்கித் தொடர்ந்து நடந்து வருகின்றன.

அகிம்சையும் கருணையும்

அகிம்சையை வெளிப்படுத்துவதற்கான மிக நேர்த்தியான, நடைமுறைக்கு உகந்த வடிவம், கருணை என்பதே ஆகும். எளியோர், உயர்ந்தோர் ஆகிய எத்தரப்பு மானிடரும் மிகுந்த முயற்சியின்றி மிக எளிதாகக் கருணை என்பதை நடைமுறைப்படுத்த கௌதம புத்தர் முதன்முதலாக வெளியிட்ட செய்தி வருமாறு " நான் பிராமணன் என்று யாரை அழைப்பேன் என்றால், மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் எவன் ஒருவன் பிற உயிர்க்கு ஊறு விளைவிக்காமல் இருக்கின்றானோ, எவன் ஒருவன் இந்த மூன்றையும் பிறர்க்கு ஊறு இன்றி அடக்கி யாள்கின்றானோ

அவனையே பிராமணன் என்று குறிப்பிடுவேன்" என்பது கௌதம புத்தரின் முதற் செய்தி ஆகும். இச்செய்தினை ஆராயும் போது, இது அகிம்சையை வலியுறுத்துவதாகவே அமைந்திருக்கிறது என்பதில் எவ்வகையான ஐயப்பாடும் இல்லை.

ஒவ்வொரு மனிதனும் சுய கட்டுபாட்டில் தனித்தன்மை பெற்று விளங்க வேண்டும் என்று கௌதம புத்தர் தெளிவுறுத்துகின்றார்.

அகிம்சை என்பது மானிடருக்கு மட்டும் அன்றி எல்லா வகை உயிரினங்களையும் அகப்படுத்தியதாக அமையவேண்டும். பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என இன்னா செய்தாரை ஒறுத்தல் என்பதே இன்னாமை அல்லது இம்சை என்பதன் மூல காரணமாகும். பொறுமை, நட்புணர்வு, ஒத்துச் செல்லும் தன்மை ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று கௌதம புத்தர் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பாகக் கௌதம புத்தர் கூறுவன :

"எந்த ஒரு உயிரையும் அது வலிமையுடையதாயினும், வலிமையற்றதாயினும் அதற்கு எவ்வித ஊறுபாடும் செய்யாதவன் எவனோ, கொல்லாமையை மேற்கொள்பவன் எவனோ, கொல்லாமைக்கு உதவியாக இருப்பவன் எவனோ அவனையே நான் பிராமணன் என்று அழைப்பேன்.

"சகிப்புத் தன்மையற்றவர்களிடத்திலே சகிப்பு தன்மையும்,வன் கொடுமையாளரிடம் மென்மையையும், வஞ்சகர்களிடம் வஞ்சகம் இன்மையையும் எவன் காட்டுகின்றானோ அவனையே நான் பிராமணன் என்று கூறுவேன்" என்பது புத்தரின் மணிமொழி.

உயிர்களிடம் அன்பு காட்டுதல் பிறருக்கு ஊறு விளைவிப்பதனை வெறுத்தல், வன்கொடுமையை விலக்குதல் ஆகியவற்றை வலியுறுத்துவதில் சமணம் வேதம் ஆகிய தத்துவங்களுக்குப் பௌத்தம் சற்றும் குறைந்தது அன்று. அவைகளைப் போலவே பௌத்தம், மனித இயல்பின் உண்மைத் தத்துவத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. இது குறித்துப் புத்தர் மக்களுக்குக் கூறும் அறிவுரை வருமாறு :

"நாம் அனைவரும் தண்டனைக்கு அஞ்சுகிறோம். சாக்காட்டிற்கு அஞ்சுகிறோம். ஆகவே எவ்வுயிரையும் கொல்லாதீர்கள்; வன்முறைக்கு வழிவகுக்காதீர்கள. எல்லா உயிர்களுக்கும் வாழ்க்கை இனிமையானது. அவ்வாறு இருப்பதால் உங்களைப் போலவே மற்றவர்களையும், எண்ணிப்பாருங்கள். எத்தகைய சிறு துன்பமும் மற்றவர்களுக்குக் கொடுக்காதீர்கள் என்பதே அவ்வறிவுரை.

மேலே செய்யப்பட்ட ஆய்வினால், புத்தமதம் அகிம்சையைக் குறைத்து மதிப்பிடவில்லை என்பது தெற்றெனப் புலனாகும். அகிம்சையை நிலை நிறுத்த மேற்கொள்ளப்பட்ட வழி முறைகள் காலம் இடம் ஆகியவற்றைப் பொறுத்துச் சிற்சில மாற்றங்களுடன் அமைந்திருக்கலாம். எனினும் அகிம்சையை பொறுத்த மானுட இயல்பு ஒன்றேயாகும் என்பது உண்மை.

எல்லா உயிரினங்களும் புவியில் வாழ்வதற்கான பாதுகாப்பினை வழங்குவது என்ற தத்துவம் அகிம்சை என்பதன் அடித்தளமாகும். புத்தருடைய காலத்தில் இதனை அடைவதற்குரிய வழியாகக் கருணை என்பது கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நட்பு, தயை ஆகிய இரண்டுக்கும் பாலமாக இருப்பது கருணை. சமத்துவம் இருந்தால் தான் நட்பினை அடைய முடியும். இத்தகைய சமத்துவ உணர்வு, அகிம்சைக்கான சூழலை உருவாக்கித் தருகிறது. சமத்துவம் என்பதனுடன் இரக்கம் என்பது இணையுமேயானால் அகிம்சை மிக வேகமான வளர்ச்சியைப் பெறுகிறது. சமத்துவம், இரக்கம் ஆகிய இரண்டும் புத்தருடைய காலத்தில் தனி மனித நிலையிலும், சமூக நிலையிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

மேலே கூறப்பட்ட வேதகாலத் தத்துவங்கள், சமணத் தத்துவங்கள், புத்தக் கொள்கைகள் ஆகியவற்றை ஆராயும் போது வாழ்க்கை என்பது அனைவராலும் விரும்பத்தக்கது என்பதும், வன்முறைகளிலிருந்து புறப்பட்டு வரும் துன்பங்களிலிருந்து அனைவரும் தப்பித்துச் செல்ல விரும்புகின்றனர் என்பதும் தெளிவாகின்றது.

துன்பம், துயரம் வன்முறை முதலான தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட வாழ்க்கைச் சூழலை மனிதன் விரும்புகின்றான். இந்தச் சூழலே அகிம்சை என்பதையும் இதனையே தத்துவ வித்தகர்கள் மிக உயரியதாய்ப் போற்றுகின்றார்கள் என்பதையும் மேலே விவரிக்கப்பட்ட விவாதங்களால் புரிந்து கொள்ள முடியும்.

வேத தத்துவங்கள் இறைனை நோக்கித் துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று மனிதன் மன்றாடுவதைச் சுட்டிக்காட்டுகின்றன.

அச்சம், துன்பம் சாக்காடு ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்ற இனிமையானதொரு வாழ்க்கையினை சமணமதமும், புத்தமதமும் வேண்டி நிற்பதையும் மேலே

ஆய்வின் மூலம் உணர்ந்தோம். இவையனைத்தும் அகிம்சையை விரும்பும். மானிட விருப்பத்தினை உறுதி செய்கின்றன. அகிம்சை என்பது இயற்கையானது என்பதையும், மனிதனிடம் நிலைத்து இருக்கின்ற இயல்பு என்பதையும் மேற்கூறிய ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அப்படியில்லாது போயிருப்பின் தத்துவ அறிஞர்கள் அகிம்சையை உயர்ந்தது என்று கருதாமல் போயிருப்பார்கள். அவர்களைப் பின்பற்றிய ஏனைண தத்துவவாதிகளின் நோக்கமும். அகிம்சை குறித்தான கருத்துரைகளும் வேறுவகையாகப் போயிருக்க வேண்டும். அவ்வாறு அன்றித் தொடக்ககாலத் தத்துவ ஞானிகளும் அவர்களைப் பின்பற்றிய சீடர்களும் ஒருமித்த குரலில் அகிம்சையே உயர்ந்தது என்று காலங்காலமாக எடுத்துரைத்து வருகின்றார்கள் என்பது கவனிக்கத் தக்கதாகும். மனித இயல்புக்கு அளிக்கப்பட்ட நிரந்தரக் கொடை அகிம்சையாகும். சில நேரங்களில் மனிதன் வன்முறையில் ஈடுபட்டிருக்கக் கூடும். ஆனால் அவன் தனது நெடிய வாழ்வுக்கும், பிறருடன் கைகோத்துப் பணியாற்றவும், தனது சொந்த வளர்ச்சிக்கும் அகிம்சையை நோக்கித் திரும்பி வந்து விட்டான் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். இதனைக் கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய தத்துவங்களுடன் ஒப்பிட்டு மேலும் ஆய்வு செய்வோம்.

2. அகிம்சை தொடர்பான கீழை நாட்டுச் சிந்தனைகள்

கன்பூசியஸ், ஜூடையிசம், கிறித்தவம், இசுலாம், குறள் முதலான சிந்தனைகள் :

கன்பூசியத் தத்துவம் சீனாவிலும், ஜூடையிசத் தத்துவம் மேற்கு ஆசியாவிலும் தோன்றிய மிகப்பழைமையான தத்துவங்கள் ஆகும். அகிம்சை தொடர்பான தத்துவங்களில் இவை சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. கன்பூசியத் தத்துவம், சீனாவிலும் அதன் அண்டை நாடுகளிலும் உள்ள மக்களின் அன்றாட வாழ்வில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது.

தீங்கு செய்த ஒருவருக்கு மீண்டும் அதே தீங்கினைத் திருப்பிச் செய்யாதே என்ற கொள்கையை அது வகுத்து வழங்கியிருக்கிறது. இது பற்றி கன்பூசியஸ் கூறுவன:

"எனக்கு யாரேனும் தொல்லை தந்தால், அவர்களுக்கு நான் எனது அன்பையும், நன்னெஞ்சத்தையும் திருப்பி அளிப்பேன். மேலும் அவன் தொல்லை அளித்தால் மேலும் அவன் மீது அன்பு காட்டுவேன். அவ்வாறு செய்யும் போது நறுமணம் பொருந்திய நன்மையாகிய தென்றல் என்மீது வீசுவதை உணர்கிறேன். தீமையும், துன்பமும் நிறைந்த காற்று தொல்லை கொடுப்பவன் மீது உயரே பறந்து போவதை என்னால் உணர முடிகிறது," இவ்வாறு கன்பூசியஸ் குறிப்பிடுகின்றார்.

மேற்கூறிய கொள்கையை ஏசு கிறிஸ்து முதலான புனிதர்கள் நடைமுறைக்குக் கொண்டு வர முற்பட்டார்கள் எனலாம். மகாவீரர், கௌதம புத்தர், கன்பூசியஸ் ஆகியோர் இக்கொள்கையின் சீரிய இயல்பை உணர்ந்து இதனைப் பின்பற்றினார். மேலும் இதிலிருந்து தோன்றும் "சமத்துவம்" என்ற இயல்பையும் வலியுறுத்தினர்.

"மற்றவர்கள் உனக்குச் செய்யக் கூடாது என்று நீ நினைக்கக் கூடியவற்றை, நீ செய்யாதே. உனது வாழ்க்கை துன்பமின்றி இருக்கவேண்டும் என்றால், பிறருடைய வாழ்க்கையைக் கெடுக்காதே" என்பது கன்பூசியஸ் கூறும் அறிவுரை.

இக்கொள்கை மகாபாரதத்தில் வரும் மகரிசி பிரகஸ்பதியின் அறிவுரையுடன் ஒத்துச் செல்கிறது. தருமரை நோக்கி பிரகஸ்பதி பின் வருமாறு கூறுகின்றனர் :

தனக்கு ஊறு விளைவிப்பது என்ற ஒன்றை எக்காரணம் கொண்டும் பிறருக்குச் செய்யக் கூடாது. இதுவே உயர்குணங்களின் அடிநாதமான விதி. ஆசைக்கு இடம் கொடுக்கும் போது குற்றமும், பாவமும் வந்து சேருகின்றன. பிறருக்கு நாம் நன்மை தீமை ஆகிய இரண்டையும் கொடுக்க முடியும் அல்லது மறுக்க முடியும். அவ்வாறு கொடுக்கும் போதும் மறுக்கும் போதும் நமக்கு அது ஏற்பட்டால் எவ்வாறு இருக்கும் என்று நமக்கு நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பிறரை நாம் தூக்கிப் போட்டு மிதிக்கும் போது அவ்வாறு மிதி பட்டவர் நம்மைத் தூக்கிப் போட்டு மிதிக்கவே செய்கின்றார். அது போலவே நாம் நலத்தையும சிறப்பையும் பிறர் பெறும்படியாக ஒருவனை வலுவூட்டும்போது அங்ஙனம் பெற்றுக் கொண்டவர் அதே வலிமையையும்

நன்மையையும் நாம் பெறும் படியாகச் செய்கின்றார். இதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே உரிய ஒழுங்கு விதிகளைப் வகுத்துக் கொள்ள வேண்டும், என்று மகாபாரதத்தில் அனுசாசன பருவத்தில் கூறப்பட்டுள்ளது.

சாந்தில் யோப நிடதத்தில், பத்து வகையான தருமங்கள் விளக்கப்படுகின்றன. அவற்றுள் முதலாவது இடம் அகிம்சைக்கு வழங்கப்பட்டுள்ளது. சமண மதமும் அகிம்சைக்கு மிக முக்கிய இடத்தை வழங்கியிருக்கிறது.

அமைதி முதலான இன்னபிற சிறப்புக்குரிய கொள்கைகள் அகிம்சை என்பதனுடன் தொடர்புடையவை. எனவே அகிம்சையைப் பின்பற்றும்போது "பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதே" என்பதனை மனிதன் தனது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

மோசஸ் என்பவர் ஜுடையிசத்தைத் தோற்றுவித்தவர். அவர் கூறுவதாவதுஃ

உயிர்க்கு ஊறுபாடு விளைவிக்காதே
பொய்ச் சாட்சியைச் சுமக்காதே
திருடாதே;
கலப்படம் செய்யாதே;
அடுத்தவனுக்கு உரியதைக் கவர்ந்து விடாதே.

கன்பூசியத் தத்துவதத்தில் உயர்ந்த ஒழுக்கம் என்பது அகிம்சையை அடிநாதமாகக் கொண்டே செல்கிறது என்பது தெளிவாகிறது.

ஜூடையிசத்தில் அகிம்சை என்பது, மனிதருக்குரிய அழியாத விதியாக மதிக்கப்படுகிறது. மனிதனின் அன்றாடக்

கொடுக்கல் வாங்கலில் இணைந்து செல்லுகிற ஒழுக்கமாகவும் மானுட வளர்ச்சியின் வாயிலாகவும் அகிம்சை என்பதனைச் ஜூடையிசம் ஏற்றிருக்கிறது. ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட தத்துவங்களில் கூறப்பட்டதற்குச் சற்றும் குறையாத தகுதிப்பாட்டினையே கன்பூசியத் தத்துவமும் ஜுடையிசமும் அகிம்சை என்ற கொள்கைக்கு வழங்குகின்றன.

கொல்லாமை என்ற கொள்கையில் கிறித்தவம்

கொல்லாமை என்ற கொள்கையில், கிறித்தவம் இசுலாம் ஆகிய இரண்டும் கீழை நாட்டில் தோன்றியவை. இவ்விரண்டு மதங்களும் மக்களின் மீது செல்வாக்குச் செலுத்தியதோடு மட்டுமின்றி புதிய வழி காட்டுதல்களையும் மக்களுக்கு வழங்கியிருக்கின்றன. அகிம்சை என்ற உயர் குணத்திற்கு ஏசு கிறித்துவின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டு.

கன்பூசியத் தத்துவத்தைப் போலவே கிறித்துவின் பண்புகளும், பகைவனை நேசி, அழிவு செய்பவர்க்கு அருள்காட்டு, துன்பம் செய்பவர்க்கு இன்பம் செய், என்பவற்றையே உறுதிப் படுத்துகின்றன. இது மட்டும் அன்றி அவர் மக்களுக்குப் பின்வருமாறு அறைகூவல் விடுக்கின்றார்.

"மற்றொருவனின் போர்வையை நீ கடனாகப் பெற்றிருந்தால், அந்தப் போர்வையை அவனிடம் மாலைக்குள் திருப்பிக் கொடுத்து விடு. ஏனென்றால் அவன் போர்த்திக் கொண்டு உறங்குவதற்கு வேறு ஒன்றும் இல்லை." மேற்கண்ட சாரதண மானிட இயல்பு நம்மிடம் இல்லையென்று சொன்னால் நாம் எந்தத் துறையிலும் முன்னேற்றம் காண்பது இயலாது. இதுவே ஏசு கிறித்து மக்கள் உள்ளத்தில் பதிக்கும் உணர்வாகும். அறநெறிகள் உச்ச நிலை பெறுவதற்கு கிறித்து எடுத்துரைக்கும் வழி இதுவே.

மனிதநேயமும், இசுலாமும்

தூய அன்பு, சகோதரத்துவம் நட்புணர்வு, எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டுதல், என்பனவே இசுலாம் மதத்தில் உள்ள அகிம்சைக் கோட்பாட்டின் அடித்தளங்கள். இந்த அடித்தளத்தின் உயிர்ப்பாக இருப்பவன் பேரிரக்கம் கொண்ட இறைவன். மனிதனுக்கு மனிதன் அன்றாடம் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல் என்பது விட்டுக் கொடுத்தல், கூட்டுறவு ஆசிய பண்புகளின் அடிப்படையில் அமைய வேண்டும். மற்றவர்களுடன் விட்டுக் கொடுத்துக் கூட்டுறவுடன் அடியெடுத்து வைக்கும் மனிதன் அன்பு மழையில் நனைவான் என்று ஹாதிக்களில் குறிபபிடபபடுகிறது.

"இறைவனின் பெயரால் ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுபவர்களுக்கும், இறைவனின் பெயரால் ஒன்று கூடுபவர்களுக்கும் என்னுடைய அன்பு எப்போதும் உரித்தாகும்" என்பதே இசுலாத்தின் படி இறைவன் கூறும் உரையாகும்.

மனிதனிடம் மட்டுமல்லாது எல்லா உயிரிரனங்களின் மீதும் பரிவு காட்ட வேண்டும் என்பதற்கு இறையருட் தூதுவர் முகம்மதுவின் வாழ்க்கையே அவரது சீடர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. முகம்மதுவின் சொந்த வாழ்வும் அவ்வாழ்வில் அவர் மேற்கொண்ட நடைமுறைகளும் அகிம்சை என்பதன் ஊற்றாக அமைந்திருப்பதால் அகிம்சை என்பதில் இசுலாமியம் ஏனைய கொள்கைகளுக்கு ஈடாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. வேதங்களில் தொழுகை வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறே இறைத்தூதுவர் முகம்மது நாள்தோறும் ஐந்து வேளை

தொழுகையைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

மேற்கூறப்பட்ட தத்துவங்கள் மட்டும் அல்லாமல், தொல் பழங்காலம், இடைக்காலம், தற்காலம் ஆகிய அனைத்துக் காலங்களிலும் தோன்றிய அனைத்துக் கீழை நாட்டுத் தத்துவங்களும் அகிம்சையை மனிதனுக்குரிய தலையாய நெறியாக அங்கீகரிக்கின்றன.

காந்தியடிகளின் அகிம்சைக்கான அடித்தளம்

ஏனைய கீழைநாட்டுத் தத்துவங்கள் அனைத்தும், அவை மிகப்பழங்காலம், இடைக்காலம், தற்காலம் முதலான எவ்வகைக் காலத்தைச் சார்ந்தனவாக இருப்பினும், மானிட அறநெறித் தத்துவங்களுள் அகிம்சைமையின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் ஒப்புக் கொள்கின்றன. காலம் இடம் ஆகிய இரண்டுக்கும் ஏற்ற வகையில், மேற்குறிப்பிட்ட தத்துவங்கள் அகிம்சையை வலியுறுத்துவதற்குத் தக்க ஆதாரங்களை அடித்தளமாக எடுத்துக்காட்டியுள்ளன. அவ்வகையில் பார்க்கும்போது, இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையை இதற்குத் தக்க எடுத்துக்காட்டு என்று கூறலாம். காந்தியடிகளின் இக்கோட்பாடு குறித்து மிக விரிவாகக் காண்பதற்கு முன்பாக இந்தியத் துணைக் கண்டத்தில் முகிழ்ந்த அகிம்சை குறித்தான பல்வேறு கருத்துக்களைக் கீழே விவாதிப்போம். ஏனெனின் இந்தியாவில் அகிம்சை என்பது அடித்தள நெறியாகப் பண்டு தொண்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது என்பது வரலாற்று உண்மை.

காந்தியடிகள் அகிம்சைக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதற்கு, அவருக்கு அடித்தளமாக

அமைந்திருப்பது பலநூற்றாண்டுக் காலங்களாக இந்தியாவில் பின்பற்றப்பட்டு வரும் இந்த அகிம்சை உணர்வே.

"இந்தியாவின் பாரம்பரியச் சொத்துகளுள் ஒன்று அகிம்சை யாகும். இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றை அது கொண்டிருக்கிறது. எனவே தான் இமயமலை எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது அகிம்சையின் வரலாறு" என்று அண்ணல் காந்தி கூறுகிறார். இந்தியாவில் பிறந்த சமயங்களும், புகுந்த சமயங்களும் அகிம்சைக் கோட்பாட்டை வளர்ப்பதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் அக்கறை காட்டியுள்ளன என்பதே அதன் தனிச்சிறப்பு" என்று அறிஞர் குறிப்பிடுவது மேலே கூறப்பட்ட கருத்துகளுக்கு வலிவூட்டுவதாக அமைந்துள்ளது. ஆகவே இந்தியப் பாரம்பரிய வரலாற்றிலும், இலக்கியங்களிலும் அகிம்சை குறித்தான சான்றாதாரங்களைச் சிந்திப்பது, காந்தீயத்திற்கான அடித்தளம் அமையப் பெற்றது என்பதைப் புரிந்து கொள்ள உதவும்.

திருக்குறள் அகிம்சையை நோக்கி இழுக்கும் ஈர்ப்புவிசை

வேதம் அல்லாத உலக இலக்கியமாகத் திகழும் திருக்குறளை இங்கே குறிப்பிடுதல் மிக இன்றியமையாதது. ஆரியர்கள் அல்லாத திராவிட மக்களைத் தென்னகத்தில் அகிம்சையை நோக்கி இழுக்கும் ஈர்ப்பு விசையாகத் திருக்குறள் திகழ்கிறது என்பதிலே எவ்வித ஐயப்பாடும் இல்லை. தென்னகத்து மக்களின் வாழ்க்கைக்கு உற்றுழி உதவிக் கைகொடுக்கும் இலக்கியமாகவும், அவர்தம் வாழ்வின் மேம்பாட்டுக்கு ஊன்றுகோலாகவும் திருக்குறள் விளங்குகின்றது.

மிக உயர்ந்த குணம் என்பது "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் இன்னா செய்யாமையிலேயே அடங்கியிருக்கிறது" என்று திருக்குறள் எடுத்துரைக்கின்றது.

வேத தத்துவம், சமணம், புத்தம் ஆகிய தத்துவங்களிலிருந்து சற்று வேறுபட்டுத் திருக்குறளானது, அகிம்சை குறித்துச் செய்யத் தகுவன இவை எனவும், செய்யத் தகாதன இவை எனவும் அறுதியிட்டு உறுதியாக வாழ்க்கைப் பாதைக்குரிய வழிகளை வகுத்துரைக்கின்றது.

இன்னா செய்வதிலிருந்து முற்றிலும் விலகியிருக்க வேண்டும் என்றும், அதுவும் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் எனத் திருக்குறள் மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றது. எனவே அகிம்சையை நோக்கிய முழுமையான அர்ப்பணிப்பையே திருக்குறள் வலியுறுத்துகின்றது. அறநெறியும் அகிம்சையும் வேறுவேறானவை யல்ல என்பதையே குறள் காட்டுகிறது.

அகிம்சையைப் புறந்தள்ளி அறநெறியை அடைய இயலாது

அகிம்சையைப் புறந்தள்ளி விட்டு அறநெறியின் இலக்குகளை அடைவோம் என்பது இயலாது என்பது குறள் கூறும் நெறியாகும். எனவே அகிம்சை என்பது முன்னே செல்ல, அதன் தொடர்ச்சியாக அதன் பின்னே வருவது தான் அறநெறி என்பதைத் திருக்குறள் உள்ளங்கைக் நெல்லிக்கனியாக வரம்பறுத்துக் காட்டுகிறது.

அகிம்சையே அறநெறிக்கு மூலமும் முதலும் ஆகும். திருக்குறளில், இன்னாசெய்யாமை கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய மூன்று அதிகாரங்களில் அகிம்சை குறித்த கருத்துக்கள் நேரிடையான முறையில் விவாதிக்கப்பட்டு

அறிவூட்டப்படுகிறது. எனினும் உயிர் இரக்கமும், மனிதநேயமும் திருக்குறளில் அனைத்து அதிகாரங்களிலும் விரவி, மாலையை இணைக்கும் நாரைப் போலவும், இசையை இணைக்கும் அடிநாதத்தைப் போலவும் அமைந்துள்ளன. அகிம்சைக் கோட்பாடு என்பது திருக்குறளின் இணைப்பு விசையாகவும், அடிப்படை உண்மையாகவும் அமைந்திருக்கிறது. அகிம்சையைப் பிரகடனப்படுத்தும் அறநூல் என்று திருக்குறளைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமானது.

இன்னாசெய்யாமை என்ற அதிகாரம் திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் அமைந்துள்ளது. இந்த அதிகாரத்தைத் தொடர்ந்து கொல்லாமை என்ற அதிகாரம் அமைந்திருக்கிறது.

இன்னாசெய்யாமை என்ற அதிகாரத்தின் தொடக்கத்தில் இந்த அதிகாரத்திற்கு விளக்கம் அளிக்க வந்த பரிமேலகழர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

"தனக்கு ஒரு பயன் கிடைக்கிறது என்பதற்காகவோ, கோபத்தினாலோ, சோர்வின் காரணமாகவோ எந்த உயிருக்கும் இன்னாதவற்றைச் செய்யக் கூடாது" என்று விளக்கம் அறித்துள்ளார்.

இன்னா செய்யாமை பற்றி வள்ளுவர் கூறியவற்றைத் தொகுத்துக் காண்போம்.

பிறருக்கு இன்னா செய்வதால் மிகப் பெரும் சித்தி கிடைக்கும் என்றாலும் அத்தகையவற்றைச் செய்து விடக் கூடாது என்பதே மனம் தூயவரது கொள்கை.

தீங்கு செய்தவரைத் தண்டித்தல் என்பது அங்ஙனம் தீங்கு செய்தவர்கள் நாணும்படியாக இனிய மகிழ்ச்சி தரும் செயல்களைச் செய்தலாகும். மேலும் தாம் செய்த உதவி, அவர் செய்த தீங்கு இரண்டையும் மறந்துவிட வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார். தாம் செய்த உதவியை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தால் அவரிடமிருந்து நன்றியையும், பிறிதோர் உதவியையும் எதிர்பார்க்கத் தூண்டும். தீங்கை நினைத்துப் பார்த்தால் கோபம் மேலும் மேலும் மிகுதிப் படும். ஆகவே இவ்விரண்டையும் மறக்க வேண்டும் என்று வள்ளுவர் பணிக்கின்றார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

நன்னயம் செய்து விடல் (குறள் : 314)

என்ற திருக்குறள், மேலே அகிம்சை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்ட அனைத்துலகச் சிந்தனையுடன் ஒன்றிச் செல்வது இங்குச் குறிப்பிடத் தக்கது.

மற்றொரு உயிருக்கு ஏற்படும் துன்பத்தைத் தன்னுடைய உயிருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் போல உணர்தலே அறிவின் பயன் ஆகும். அங்ஙனம் உணராத போது அறிவினால் எவ்வகைப் பயனும் இல்லை.

மேலும் வள்ளுவர் கூறும் தலையாய அறம் யாது என்பதைக் காண்போம். எவ்வளவு சிறியதாக இருந்தாலும் மனத்தாலும் பிறருக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்துவிடக் கூடாது என்பதே வள்ளுவர் காட்டும் தலையாய அறம்.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை (குறள் : 317)

என்பது வள்ளுவரின் தீர்ப்பு.

பிறருக்கு ஒரு தீங்கை முற்பகலிலே செய்தால் அதன் பயனான, மற்றொரு தீங்கு அவனுக்கு மாலைப் பொழுதிலே வந்து சேரும் எனவும் வள்ளுவர் தெளிவுறுத்துகின்றார். இக்குறளுக்கு விளக்கவுரை வரையும் பரிமேலழகர், "தவம் அழிதலின்" தீமை மிக வேகமாக வரும் என்று குறிப்பிடுகின்றார். ஒரு துறவியானவன் பிறர்க்குத் தீங்கு செய்யும் போது அவனுடைய தவம் அழிகின்றது. தவம் அழிந்த நிலையில் அவனை நோக்கித் தீமை வருகிறது. இங்கே இரண்டு குறிப்புகளைக் காண முடிகிறது. ஒன்று, ஒருவன் செய்யும் "தவம்", அவனை நோக்கித் தீமைகள் அண்டாமல் காக்கும் அரணாக அமைந்திருக்கின்றது என்பது. இரண்டாவது, பிறர்க்குத் தீங்கு செய்யும் நிலையில் தவம் அழிவதோடு மிக வேகமாகத் தீமையும் வந்த சேரும் என்பது. துறவறவியலில் துறவறத்தைப் பற்றியே இக்குறிப்பினைப் பரிமேலழகர் கூறியுள்ளார். எனினும் இது இல்லறத்தார்க்கும் பொருந்துவதாகவே இருக்கிறது. இல்லறத்திலும் "அன்பு", "அமைதி" முதலான தவத்தை மேற்கொள்வதே வாழ்விற்கு ஒளியூட்டுவது என்பது வெளிப்படையான உண்மையாகும். எனவே துறவறத்தார்க்கு என்று சொல்லப்பட்ட இந்த அறம் இல்லறத்தார்க்கும் பொருந்துவதே ஆகும்.

சிலப்பதிகாரத்தில் "கொன்று அச்சிலம்பு கொணாக" எனக் கோவலனை ஆராயாது கட்டளையிட்ட பாண்டியன் நெடுஞ்செழியன், செங்கோல் வழுவினான். இங்ஙனம் வழுவிய செயலுக்காக அவன், "யானோ அரசன், யானே

கள்வன்" என்று கூறி, கோப்பெருந்தேவி முன்பாக உயிர்துறந்த நிகழ்ச்சியை இளங்கோவடிகள் காட்டுகின்றார். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது, சிலப்பதிகாரத்தில் இல்லறத்தைச் சார்ந்திருந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் பொருந்தியிருந்ததை உணர்தல் வேண்டும். எனவே தீங்கு செய்த போது தவம் அழிந்து, அத்தீங்கே திரும்பவும் வருதல் என்பது இல்லறம் துறவறம் ஆகிய இரண்டுக்கும் பொதுவானதே.

துன்பம் இல்லாமைக்கான வழியையும் வள்ளுவர் காட்டுகின்றார். துன்பம் யாரை வந்து அடையும் என்றால், பிறருக்குத் துன்பம் செய்தவரையே வந்த அடையும். எனவே தமது உயிருக்குத் துன்பம் வரக் கூடாது என்று நினைப்பவர்கள், பிற உயிருக்குத் துன்பம் விளைவித்தல் கூடாது.

நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்
நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர் (குறள்: 320)

என்ற குறட்பா இக்கருத்தினை உணர்த்துகின்றது.

கொல்லாமை என்ற அறம்

இன்னாசெய்யாமையை அடுத்துக் கொல்லாமை என்ற அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் பெரிதும் வலியுறுத்துகின்றார்.

கொல்லாமை என்பது ஒரு தனியான அறம் என்று கூற இயலாது. அது எல்லா அறங்களையும் தன்னுள்ளே அகப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே,

அறவினை யாதெனின் கொல்லாமை, கோறல்

பிறவினை எல்லாம் தரும் (குறள்: 321)

என்றார் வள்ளுவர்.

இக்குறளில் "அறவினை" என்பதற்கு விளக்கவுரை வரையும் பரிமேலழகர், "அறங்கள் எல்லாமாகிய செய்கை யாது என்று வினவின், அஃது ஓர் உயிரையும் கொல்லாமையாம்" என்று கூறுகின்றார். மேலும் "கொல்லாமை தானே பிற அறங்கள் எல்லாவற்றின் பயனையும் தரும்" என்றும் கூறுகின்றார். எனவே கொல்லாமை என்பது ஏனைய எல்லா அறங்களையும் தனக்கு உள்ளே அகப்படுத்தி இருப்பது என்பது தெளிவாகின்றது.

பிறர்க்கு இனிமை செய்யும் போது பாவம் அழியும் என்பதும், பிறர்க்குத் தீங்கும் கொலையும் செய்த போது பாவம் வளரும் என்பதும் கீழ்வரும் குறளால் வலியுறுத்தப்படுகிறது.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது

இன்னுயிர் நீக்கும் வினை (குறள்: 327)

தன் உயிரை நீக்க வேண்டிய நிலை இருப்பினும், மற்றொரு உயிருக்கு துன்பம் செய்தல் ஆகாது என்ற பேரறம் இக்குறளில் நிலை நாட்டப்படுகிறது.

அருளால் அல்லல் அழியும்

வள்ளுவர் தரும் "அருளுடைமை" என்ற அதிகாரமும் உயிரிரக்கப் பண்பினை வெளிப்படுத்துகின்றது.

"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை" என்று வள்ளுவர் தெரிவிக்கின்றார். இங்கு "அல்லல்" என்பது,

இம்மை மறுமை ஆகிய இருவகைத் துன்பங்களையும் குறிப்பிடுகின்றது. இவ்விருவகைத் துன்பங்களும் அருளின் காரணமாக அழிந்து போகும் என்பதனையே வள்ளுவர் மேற்குறிப்பிட்டவாறு கூறினார்.

அருள் என்பது யாது எனில் அது உயிர்களைப் பாதுகாத்தலாகும். அருள் ஆள்தல் என்பதற்குப் மன்னுயிர் ஓம்புதல் என்று வள்ளுவர் விளக்கம் தருகின்றார். இங்ஙனம் அருள் உடைமையை விளக்கிய வள்ளுவர் இதனை அடுத்துப் புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தை வைத்தார்.

தின்பதற்காகவோ, வேறுவகைக் காரணங்களுக்காகவோ, புலாலை விரும்பாமல் விலக்க வேண்டும் என்பது தமிழ்மறையாம் திருக்குறள் கூறும் விதியாகும்.

தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது இருத்தலுமே தவத்தின் வடிவம் எனவும் வள்ளுவர் கூறுகின்றார். இன்னா செய்யாமை, கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்ட கருத்துகளின் வீச்சு தவம் என்ற அதிகாரத்திலும் ஒளிவிடுவதை,

உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை

அற்றே தவத்திற்கு உரு (குறள் 261)

என்ற குறள் காட்டுகிறது.

சிலப்பதிகாரத்தில் சாவக நோன்பி

சிலப்பதிகாரத்தின் தலைவன் சமணத்தைச் சார்ந்தவன் என்று இக்காப்பியத்தில் காணப்படுகிறது. கோவலன் "சாவக நோன்பி" என்று குறிப்பிடப்படுகின்றான்.

"சாவக நோன்பு" என்பது துறவு கொள்ளமலே விரதம் காத்தல் ஆகும். இவ்வகை விரதத்தினோர், தூயநற்கலன்களில் ஆக்கப்பட்ட சைவ உணவை உண்டனர் என்பது சிலப்பதகாரத்தால் அறிப்படுகிறது.

"சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்"

(சிலம்பு : 16 : 18)

என்ற சிலப்பதிகார வரி சுட்டுகின்றது.

சாவகநோன்பியாகிய கோவலனுக்கு அமுது படைப்பதற்காக, மாதரி வீட்டில் , பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளங்காய், மாங்கனி, வாழைக்கனி, செந்நெல் அரிசி, பால், நெய் ஆகியவை கண்ணகியிடம் வழங்கப்பட்டன வென்று சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. இத்தகைய விரதம் உடையோர் புலால் மறுத்துத் தூய சைவ உணவை உண்டனர் என்பதற்கு மேற்கூறப்பட்ட சிலப்பதிகாரச் செய்தி சான்றாக அமைகின்றது. புலால் மறுத்தல் என்பது ஒருவகை நோன்பு, தவம் என்பதும் இதனால் புலனாகும்.

சிறைச்சாலையை அறச்சாலையாக்கிய மணிமேகலை

"மணிமேகலை" எனப்படும் காப்பியம், "மணிமேகலை துறவு" எனவும் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் யாதெனில் தனது அழகு, இளமை ஆகியவற்றைத் துறந்து மணிமேகலை பௌத்தப் பெண் துறவியாக இருந்து நாட்டிற்கு அருள் மழை பொழிந்து சிறைச்சாலையை அறச்சாலையாக்கிய அவளது வாழ்க்கையின் மாண்பே ஆகும்.

குல தெய்வத்தின் அருளின் காரணமாக மணி பல்லவத் தீவை அடைந்தாள் மணிமேகலை. தனது முற்பிறப்பின்

வரலாற்றை உணர்ந்தாள். அங்கே அவளுக்கு அமுதசுரபி கிடைத்தது. அந்த அமுதசுரபியின் உணவின் வாயிலாகக் கூன், குருடு, ஊமை, செவிடு, நோயாளிகள், திக்கற்றவர்கள் ஆகியோருக்கு உணவு நல்கித் தொண்டு புரிந்தாள்.

சோழ இளவரசன் உதய குமரனின் கொலைக்கு மணிமேகலை காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று கருதிய சோழ மன்னன் அவளைச் சிறையிலிட்டான். அச்சிறையில் இளவரசனை இழந்த சோழ நாட்டு அரசி, மணிமேகலைக்குப் பல இன்னல்களைக் கொடுத்தாள். தனது தவ வலிமையால் மணிமேகலை அவற்றிலிருந்து மீண்டாள். பின்னர் இளவரசன் இறந்ததற்கு மணிமேகலை எவ்வகையிரும் காரணமாக இல்லை என்ற உண்மையை அரசி உணர்ந்தாள். மணிமேகலையின் உயர் பண்பை அறிந்து அரசி, அவளைத் தொழுதாள். அப்போது மணிமேகலை அரசியை நோக்கி, "நாட்டு மன்னனின் தேவியாகிய நீ என்னை வணங்குதல் கூடாது" என்று ஆன்று அவிந்து அடங்கிய உள்ளத்துடன் பேசினாள்.

மணிமேகலையின் உண்மையை அறிந்த அரசன் அவளைச் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்க ஆணையிட்டான். அப்போது மணிமேகலை அரசனிடம் ஒரு வரம் கேட்டாள். "அரசே சிறைச்சாலையை எல்லாம் அறச்சாலை ஆக்குக" என்று கேட்டாள். இவ்வாறு இன்னலுறுவார் மீது இரக்கம் காட்டுகின்ற உயிரிரக்கப் பண்பும், பௌத்த மத அறவுரைகளும் மணிமேகலை என்ற நூலில் நிறைந்திருக்கிறது.

நாலடியார் கூறும் தவத்தின் மாண்பு

சமண சமயத்தாரால் தமிழ் மொழிக்கு இளமை குன்றாத அணிகலன்களாகக் கிடைத்த நூல்கள் பல. சிலப்பதிகாரம் முதலான சொல்லோவியங்களும், நன்னூல் முதலான மொழிவல்லமையைக் கூறும் இலக்கண நூல்களும் சமண சமயத்தாரால் அளிக்கப்பட்டவைகளே. சமண சமயத்தார் வழங்கிய அறநூல்கள் பல. அவற்றுள் நாலடியார் திருக்குறளைப் போலவே அறக்கருத்துகளை முதன்மைப்படுத்தி மொழிகின்றது.

தவத்தின் சிறப்பினை மேலே விரிவாக விவாதிக்கின்றோம். தவத்தை ஒளி என்றும், பாவத்தை இருள் என்றும் நாலடியார் கூறுகிறது. ஒளி பரவப் பரவ இருள் மாய்வதனைப் போலத் தவம் ஒருவனிடம் பெருகப் பெருக, அவனது பாவம் நீங்கிவிடும் என்பது நாலடியார் கூறும் விளக்கமாகும்.

"விளக்கு புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்

தவத்தின் முன் நில்லாதாம் பாவம்"

என்ற பாடற்கருத்தால், தவம் நீங்கினால் அங்கே பாவம் பரவி விடும் என்ற உண்மை நிலைநிறுத்தப் பெறுகின்றது.

இனியன மொழிதல்

அகிம்சை என்ற பேரியல்பின் ஒரு பகுதியாக அமைவது பொறையுடைமை. நீண்ட நாட்கள் பழகிய ஒருவன், சில நேரங்களில் நமக்குத் தீமை செய்து விடுவதனை உலகியலில் காண்கின்றோம். தீமை செய்த அவனிடம் பொறுமை காட்டி இன் மொழி கூறுவதோடு, அவனுடைய அறியாமைக்காக நாமே நொந்து கொள்ள வேண்டுமே தவிர

அவனை வெறுத்து ஒதுக்கிவிடக் கூடாது என்பது நாலடியார் கூறும் அறம்.

இன்னா செயினும், இனிய மொழிக என்று
தன்னையே தான் நோவின் அல்லது துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது

பழகியவரைக் கைவிடும் செயலை விலங்கும் செய்யாது என்பதனை எடுத்துக்காட்டி நாலடியார் பொறையுடைமைக்கு ஏற்றம் வழங்குகின்றது.

அபயம் என்றவரைக் காக்கும் இராமன்

அபயம் என்று வந்தவரை இரக்க உணர்வுடன் தம்முயிர் போனாலும், காப்பாற்றி அன்பு காட்டுதல் என்பது வைணவ சித்தாந்தம் ஆகும். கம்பர் காட்டும் இராமாயணத்தில் இராமனின் தனிப்பெரும் பண்பாக இந்த "அபயம்" என்பது ஓவியப்படுத்தப்படுகிறது.

தசரதனாம் தந்தையின் ஆணையைத் தலைமேற் கொண்டு கானகம் அடைந்த இராமன் தண்டக வனத்தினை அடைந்தான். தண்டக வனத்தில் இருந்த முனிவர்கள், அரக்கர்களால் சொல்லொணாத் துன்பமுற்றிருந்தனர். அம்முனிவர்கள் இராமனிடம் "ஐயனே நாங்கள் இதுநாள் வரை, இருள் சூழ்ந்த நாட்களைக் கொண்டே கழித்தோம். இப்போது எழுஞாயிறு தோன்றியதனை ஒப்ப நீ எங்களை வந்து அடைந்திருக்கின்றாய்! நீ வீரனாக இருந்தாலும், அருளிலிருந்து தவறாத வீரனாக இருக்கின்றாய் உனக்கு நாங்கள் அடைக்கலம்! நீயே எங்களைக் காக்க வேண்டும்" என்று கூறினர்.

பொருளுடை மன்னவன் புதல்வ! போக்கிலா

இருளுடை வைகஎலம்; இரவி தோன்றினாய்;

அருளுடை வீர நின் அபயம் யாம் என்றார்

(கம்பராமாயணம், அகத்தியப் படலம்: 16)

வீரர்களும் அருள் நிறைந்தவராக இருக்க வேண்டும் என்பதும், அவ்வருளும் பிறரைக் காப்பதற்குப் பயன்பட வேண்டும் என்பதும் இப்பாடலின் மிக இன்றியமையாக் கருத்து ஆகும்.

தண்டக வனத்தில் உள்ள முனிவர்களின் அபயத்தினை ஏற்று, இராமன பின்வருமாறு கூறினான் :

"நான் கானகம் நோக்கி வந்ததனால் என் தந்தையாராகிய தசரதச் சக்கரவர்த்தி இறந்துபட்டார். தாயாகிய கோசலை துயரம் எய்தினாள். என் தம்பி பரதன் பாதுகையே சரண் எனப் புகுந்து பெருந்துயர் அடைந்தான். அயோத்தி மாநகரத்து என் மக்கள் எல்லாம் உயிர் பிரிந்தது போன்ற வன் துயர் அடைந்தனர். இத்தனை துயரங்கள் நிகழ்ந்திருந்தாலும், கூட நான் வனத்திற்கு வந்த இதனை என்னுடைய புண்ணியப் பெரும் பயன் என்றே சொல்வேன். ஏனென்றால் முனிவர்களாகிய உங்களுடைய துன்பத்தைப் போக்குவது என்பது நான் வாழ்நாளில் பெறும் பேறு.

நான் வனத்திற்கு வந்து பலரது துன்பத்தைப் போக்க முடியும் என்றால் இதைவிடப் புண்ணியம் வேறு ஒன்று இருக்க முடியுமா?" என்பது இராமனின் மொழி.

"வேந்தன் வீயவும், யாய் துயர் மேவவும்,

ஏந்தல் எம்பி வருந்தவும், என் நகர்

மாந்தர் வன்துயர் கூரவும், யான் வனம்

போந்தது, என்னுடைய புண்ணியத்தால்" என்றான்.

(கம்ப. அகத்தியப்படலம்: 18)

மேலும் இராமன் பேசுவது இங்கே குறிப்பிடத்தக்கது "பசுக்களைக் காப்பதற்காகவும், அந்தணர்களைக் காப்பதற்காகவும், ஏழை எளியவர்களைக் காப்பதற்காகவும், யாரைக் காப்பதற்காக இருந்தாலும், பிறருக்கு உதவும் வகையில் இறக்கின்றவர்களே வானத்துத் தேவர்களும் வணங்குவதற்குரிய தேவர்களாக இருக்க முடியும்" என்பது இராமனின் வாக்கு. இதனை,

ஆவுக்கு ஆயினும் அந்தணர்க்கு ஆயினும்

யாவர்க்கு ஆயினும் எளியவர்க்கு ஆயினும்

சாவப்பெற்றவரே, தகை வான் உறை

தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்

(கம்ப. அகத்தியப் படலம்: 21)

என்ற பாடலால் உணர்கிறோம்.

மேலும் தண்டக வனத்து முனிவர்களை நோக்கி இராமன், "சூரபன்மனை வேல் கொண்டு அழித்த முருகக் கடவுளும், கொடும் பகைவரைச் சக்கரம் கொண்டு அழிக்கும் திருமாலும், திரிபுரம் அழித்த ஒப்பற்றவனாகிய விரிசடைச் சிவனும், என்று இவர்கள் எல்லாம் துணையாக வ்ந்து எதிர்த்தாலும், யார் அறத்துக்குப் பொருந்தாமல் பாவவழிகளில் நின்றார்களோ அவர்களை வேரோடு அழியச் செய்வேன்; நீங்கள் சிறிதும் அஞ்ச வேண்டாம் என்று கூறி

அபயம் என வந்தவர்களுக்கு ஆறுதல் அளித்து ஏற்கின்றான். இதனை,

சூர் அறுத்தவனும், சுடர் நேமியும்,
ஊர் அறுத்த ஒருவனும், ஓம்பினும்
ஆர் அறத்தினோடு அன்றி நின்றார், அவர்
வேர் அறுப்பென்; வெருவன்மின் நீர்' என்றான்

(கம்ப. அகத்தியப் படலம்: 22)

என்ற பாடலால் அறிந்து கொள்கின்றோம்.

கையில் கத்தியுடன் எதிரே வருபவர்களைக் கொல்லப் புறப்படும் பைத்தியக்காரரைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. பிறரைக் கொல்ல வேண்டும், இடையூறு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் அறிவற்ற இரக்கமற்ற பித்தம் ஏறிய கொடியவரைக் கொல்வதென்பதும் அகிம்சையின் பாற்பட்டதே என்று காந்தியடிகள் எழுதுகின்றார். (Theory and Practice of Gandhian Non-Violence, Ch-II) ஆனால் இச்செயல் அகிம்சையானதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த உதவ முடியும் என்பதையும் காந்தியடிகள் குறிப்பிடுகின்றார்.

மேற் கூறிய காந்தியடிகளின் கருத்துகளோடு கம்பர் கூறும் கருத்தும் ஒத்துச் செல்வதைக் காணமுடிகிறது.

இராமனின் இளமை

பிறருடைய இடரைத் தீர்க்கும் குணம் இராமனிடம் மிக இளைய பருவத்திலேயே இருந்தது என்பதை இராமாயணம் சுட்டிக்காட்டுகிறது.

குல குருவாகிய வசிட்டரிடம் இராமன் முதலாம் சகோதரர்கள் கல்வி கற்றனர். கல்வி கற்றுத் திரும்பும் வேளையில் எதிரே வரும் அயாத்தி நகரத்து மக்களைப் பார்த்து இராமனின் முகம் ஒளி விடும். அந்த முகத்தின் ஒளி எத்தகையது என்றால் அது கருணை கலந்ததாக இருக்கும். அம்மக்களை நோக்கி,

"ஐயா, உங்களுக்கு எம்மாலே ஆக வேண்டிய செயல் ஏதேனும் இருக்கிறதா? உங்களுக்கு எவ்விதத் துன்பமும் இல்லையன்றோ? உங்கள் மனைவியும் குடும்பமும் நலமா? உங்களுடைய மதிநிறைந்த பிள்ளைகள் வலிமையுடன் திகழ்கின்றார்களா?" என்றெல்லாம் இராமன் கேட்பான். இதனை

எதிர் வரும் அவர்களை, எமையுடை இறைவன்,
முதிர் தரும் கருணையின் முகமலர் ஒளிரா,
எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்
மதி தரு குமரரும் வலியர் கொல்? எனவே

(கம்ப. திருஅவதாரப் படலம் : 311)

என்ற பாடலால் உணர்கிறோம்.

இராமனது வினாவுக்கு அந்நகரத்து மக்கள், 'யாவும் நலமாகவே உள்ளன. உமது எண்ணம் சிறப்பாக இருக்கிறது. அவ்வாறே இந்நகரத்தில் நடைபெறும் செயல்களும் சிறப்பாகவும் நன்றாகவும் இருக்கின்றன. நீங்கள் அரசாளும் போது எங்களுக்கு எவ்விதமான குறைவும் வராது. அப்படியே குறைவரினும் அது பொருட்டாகத் தோன்றாமல் மறைந்து போகும்' என்று பதிலுரைப்பார்கள். இதனை,

"ஐய! நினை எமது அரசு என உடையேம்
இஃது ஒரு பொருள் அல"

என்ற பாடல் வரிகளால் அறிகின்றோம்.

இராமன் இளவரசனாகக் கல்வி பயிலும் காலத்திலேயே, மக்கள் அவனை அரசன் என்றே ஏற்றுப் போற்றினர் என்பதும், இராமனால் யாருக்கும் எவ்விதத் துன்பமும் இன்றி அரச பாரத்தைத் தாங்க முடியும் என்பதும், பிறர் துன்பம் துடைக்கும் இயல்பு இராமனிடம் மிக இளம் பருவத்திலேயே நிறைந்திருந்தது என்பதும் மேற்குறித்த பாடல் வரிகளாலே நாம் உணர முடிகிறது.

சரணாகதி தத்துவம்

வைணவ சித்தாந்தத்தில் சரணாகதி தத்துவம் என்பது மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. அடைக்கலமாக அடைந்தவரின் அடைக்கலத்தை ஏற்றுக் கொண்டு அவர்தம் துயரைத் தீர்த்து அவர்க்கு இன்பம் உண்டாக்குதல் என்பது இராமாயணம் முதலான வைணவப் பாடல்களில் எல்லா இடங்களிலும் விரவிக்கிடக்கிறது.

மகாபாரதத்தில் துரியோதனனின் சபையில் திரௌபதி துச்சாதனனால் துகிலுரியப்பட்டபோது, கண்ணனை மனத்திலே தியானித்து வழிபட்டாள் என்பதனைப் பார்க்கின்றோம். திரேளபதி இறைவன் என்னும் ஒளியில் கலந்தாள். உலகை மறந்தாள்; இறைவனை அன்றி வேறு ஒரு நினைவும் இல்லை இறைவனை முழுமையாகச் சரணாகதி அடைந்தாள். இதனைப் பாரதி,

பிச்சேறியனைப் போல் - அந்தப்
பேயனும் துகியிலனை உரிகை யிலே
உட் சோதியிற் கலந்தாள்! அன்னை
உலகத்தை மறந்தாள்; ஒருமையுற்றாள்
(பாஞ்சாலிசபதம் : 94, 95)

என்று புலப்படுத்துகின்றார்.

அவளது வாய், ஹரி ஹரி ஹரி என்று முணு முணுத்தது.

"கண்ணா அபயம் அபயம் உனக்கு அபயம்"

என்று கூறினாள்

"ஐய, நின் பதமலரே சரண்"

என்றும் கூறினாள். "கண்ணா உன்னையன்றி வேறு யாருடைய துணையும் எனக்கு இல்லை. ஆகவே

நம்பி நின்னடி தொழுதேன், என்னை
நாண் அழியாது இங்குக் காத்தருள்வாள்.

என்று வேண்டினாள்.

திரௌபதியின் அபயக் குரலை ஏற்ற கண்ணனது அருளால் அவளது ஆடை வளர்ந்தது என்பதனைப் பாரதத்தில் பார்க்கின்றோம்.

இராவணனுக்கு இராமன் காட்டிய கருணை

இராமனுடன் போரிட்ட இராவணன் படைக்கலம் அனைத்தையும் இழந்து நின்றான். அப்போது இராமன், வெறுங்கையோடு நிற்பவனைக் கொல்வது அறம் ஆகாது என்று கருதினான். இராமன், இராவணனுக்குப் பின் வருமாறு கூறினான் :

"போர்புரிவதற்கும் அறம் என்பது உண்டு. அந்த அறத்திலிருந்து தவறிப்போய் மறத்தினை அடிப்படையாகக் கொண்டு போர்புரிந்து வெற்றி கண்டு விடுவோம் என்று நினைத்தால் அது தேவராலும் இயலாது. இன்றைய தினம் நீ உன் சுற்றத்தாரைச் சென்று அடைவாயாக. உனது தனிமையைக் கண்டு இரக்கம் கொண்டு நான் இப்போது உன்னைக் கொல்லுவதைத் தவிர்த்து விட்டேன்.

கயமை கொண்டவனே! போரிடும் ஆற்றல் உனக்கு இருக்கும் என்று சொன்னால், படைக்கலக் கொட்டிலிலே நீ அடைத்து வைத்த போர்ப்படைக் கருவிகளுடனே நாளை நீ போர்புரிய வருக!

உன்னுடைய தலை தரையிலே உருளாமல் இருப்பதற்கான வாய்ப்பையும் நான் வழங்குகின்றேன். உன்னால் சிறைக்களப் படுத்தப்பட்ட சீதையை விடுவித்து உன் தம்பி வீடணனை, அரக்கர்க்கு அரசனாகும் படியாகத் தலைமை தந்து அவனுக்கு நீ பணி செய்தல் வேண்டும். அவ்வாறானால் நீ அழிவிலிருந்து தப்பிக்க முடியும்.

அவ்வாறு செய்ய உனக்கு விருப்பம் இல்லை என்றால் உனக்கு உள்ள படைகளை எல்லாம் திரட்டிக் கொண்டு என் எதிரே வருக.

ஆளுவதற்கு உனக்குத் துணையாக அமைந்த படைகள் எல்லாம், இப்போது காற்றில் பறக்கும் பூளைப் பூவைப் போலப் பறந்து விட்டன. என்னை எதிர்த்துப் போரிடுதல் என்பது இப்போது உன்னால் இயலாது. ஆகவே, நீ இன்றைய தினம் சென்று நாளைக்கு உன் படைகளுடனே வருக" என இராவணனுக்கு, இராமன் கருணை நிறைந்த சொற்களை வழங்கினான்.

இவ்வாறு கூறிய இராமனுக்கு இந்த இடத்தில் அடைமொழித் தொடர் ஒன்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு கருணையுடன் இரவணனிடம் பேசியவன் யார் என்றால், "மிகவும் இளமை வளத்துடன் பொலிந்து நிற்கும் பாக்கு மரத்தின் மீது, வாளை மீன்கள் துள்ளித் தாவும் நீர்வளப்பம் நிறைந்திருக்கிற கோசல நாட்டுக்கு உரிமை படைத்த வள்ளலாகிய இராமன்" என்று கூறப்பட்டுள்ளது. இங்கு, இவ்வாறு இராமன் பேசியதனைக் கூறினான், சொன்னான், போன்ற சொற்களால் குறிப்பிடாமல் "நல்கினான்" என்ற சொல்லால் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தது. நல்குதல் என்பது இனிமையான ஒன்றை ஒருவருக்குக் கொடுப்பதாகும். கொடையாக ஒன்றனை வழங்குவதையே நல்குதல் என்று கூறுதல் மரபு ஆகும். இங்கு இராமனும், இராவணன் பால் கருணை கொண்டு கருணைக் கொடையாகவே இச்சொற்களை வழங்கியிருக்கின்றான் என்பது உணர்தற்கு உரியது. மேலும் இராமனுக்குக் கோசல நாடுடை வள்ளல் என அடைமொழி கொடுத்துக் கூறப்பட்டமைக்கு மு. இராகவையங்கார் பின் வரும் விளக்கத்தினை அளித்துள்ளார்.

மகா அபராதியான இராவணனை, வாய்ந்த இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அழித்து முடிக்காமல் இவ்வாறு கூறியது இராமபிரானது கருணைத் திறத்தைக் காட்டுவது என்பது உண்மை தான். அதனால், இவனது அளவில் ஆற்றலைக் கண்கூடாகக் கண்ட இராவணன், இனி நம்மால் எதிர்த்து நிற்றல் அரிது என்று சரணாகதி பண்ணிவிடுவான் ஆயின், அவன் தம்பி விபீஷணனுக்குக் கடற்கரையிலே இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்று யாவரும் அறியப் பெருமான் செய்த பிரதிக்ஞை என்னாகும்? அதற்கு இவன்

செய்யும் பரிகாரம் யாது? அதற்கும் விடையளிப்பவர் போலக் கம்பர் அமைத்துள்ள அழகு குறிப்பிடத்தக்கது. அவ்வாறு, இராவணன் சரணம் புகுவானாயினும், தான் செய்த பிரதிக்ஞையைக் காக்க வல்ல சத்திய சங்கற்பன் பெருமான் என்பதும், அவன் சரண்புக்க நிலையில், தன்சொற்படி இலங்கை அரசை விபீஷணனுக்கு அளித்து விட்டு, இராவணனுக்கு அவன் நிலை தாழாதிருக்கும் படி, தன் ஏகாதி பத்யமான கோசல ராஜ்யத்தையே அளித்து உதவக் கூடிய தானவீரன் அவன்."

இவ்விளக்கத்தின் வாயிலாக, வைணவ சித்தாந்தத்தில் இறைவனின் அருட்கருணைத் திறமாகிய சரணாகதி சித்தாந்தமும், அங்ஙனம் சரணாகதி பண்ணினால் ஏற்படும் பயனையும் மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. சரணாகதி பண்ணும் போது தான் என்பது அற்றுப் போய் அனைத்தும் இறைவனே என்ற ஆகி விடும் நிலையில் இறையாற்றலின் அருளை முழுவதுவாகப் பெற்றுவிட முடியும் என்பதும் இதனாலே விளக்கப்படுகிறது.

வள்ளலாரின் உயிரிரக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய வடலூர் வள்ளற் பெருமான் இராமலிங்கர் உயிரிரக்க பண்பில் உலகில் உள்ள தத்துவ ஞானிகளிலிருந்து பெரிதும் வேறுபட்டு நிற்கின்றார்.

மனிதரிடமும், விலங்குகளிடமும், பறவைகளிடமும், காட்டுகின்ற இரக்கத்திலிருந்து மேம்பட்டு ஓரறிவு உயிராகிய மரஞ்செடி கொடிகள் மீதும் இரக்க உணர்வு காட்டுகின்ற அவர்தம் பேரருள் திறத்தை வியக்காமல் இருத்தல் முடியாது.

"இரக்கம் என் உயிரென்ன வேறில்லையே

நிலை பெறும் இரக்கம் நீங்கில் என் உயிரும் நீங்கும்"

என்றார் வள்ளலார்.

கடவுளின் இயற்கை விளக்கத்தை ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் பெற முடியும் என்ற பாதையை வகுத்தவர் வள்ளற் பெருமான். இது குறித்து வள்ளலார் கூறுவன வருமாறு :

"அருள் என்பது கடவுள் தயவு. கடவுள் இயற்கை விளக்கம். ஜீவகாருண்யம் என்பது சீவர்கள் தயவு. சீவர்களின் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக் கொண்டு தயவைப் பெறுதலும், விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலும் கூடும். சிவகாருண்யம் விளங்கும். அதனால் உபகார சக்தி விளங்கும். அந்த உபகார சக்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும்.

பரோபகாரம் ஒன்றே நித்திய மெய்வாழ்க்கையையும் திருவருள் இன்பத்தையும் பெற்றுக் கொள்ளும் சாதனம் என்பதை அறிய வேண்டும்" என்று அவரது தத்துவத்தின் உயிர்ப்பு ஆற்றலை விளக்கியுள்ளார்.

எல்லா உயிர்களையும் தம் உயிர் போலக் கருத வேண்டும். மனித உயிரும் விலங்கின உயிரும் பிற உயிர்களும் வேறு வேறானவை அல்ல. இவ்வாறு கருதும் உணர்வை "ஒத்துரிமை" என்று இராமலிங்கர் அழைக்கின்றார். இங்ஙனம் ஒத்துரிமை உடையவரின் உள்ளமே இறைவன் நடனமிடும் மன்றம் ஆகும். இதிலே மிக உறுதியாக இருந்தவர் வள்ளலார்.

எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும்
தம் உயிர் போல் எண்ணி, உள்ளே
ஒத்து உரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர், அவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான்
நடம் புரியும் இடம் என
நான் தேர்ந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கு ஏவல் செய்திட
என் சிந்தை மிக விழைந்ததாலோ

என்ற பாடலால் வள்ளலார், எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் கருதுகின்றவர்களை 'வித்தகர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கின்றார். வித்தகர் என்பவர், சதுரப்பாடும் உளநலமும் பொருந்தியவர் ஆவர். சீவகாருண்ய சித்ததாந்தத்தின் உயர் ஒழுக்க நெறியாகிய உயிரிரக்கம் பேணுபவர் உளநலத்தால் சிறந்து நிற்கின்றார் என்பது வள்ளலாரின் முடிந்த முடிவு. அத்தகையோரின் பாதங்களுக்கு, அவர் சொல்லும் ஏவலைச் செய்யக் காத்துக் கிடப்பதாகத் தமது விருப்பத்தையும் வள்ளற்பெருமான் இங்கே புலப்படுத்தியிருக்கின்றார்.

பெரும் செல்வம் திரட்டி அச்செல்வத்தால் உலகை வென்றவர்கள் உண்டு. காலம் தோறும் கற்று வந்த கலையால், உலகத்தை வென்றவர்கள் உண்டு. வீரத்தாலும். விளையாட்டாலும் வென்றவர்கள் உண்டு. அறிவியலில் புதியன கண்டு வென்றவர்கள் உண்டு. இரக்கத்தால் உலகத்தை வெற்றிகண்டவர் அருட்பிரகாச வள்ளலார்.

உலகத்திற்கு இரக்க உணர்வைப் பலவாறாக வாரி வழங்கி சத்திய தருமச் சாலையைத் தோற்றுவித்து உத்தமப் பண்பை நிலை நிறுத்தியவர் இராமலிங்க வள்ளல்.

ஆங்கிலக் கவிஞரான லிட்டன் பிரபு "ரோசாப்பூவை மிகவும் விரும்புங்கள், ஆனால் அந்த ரோசாவை அந்தச் செடியில் இருந்து பறித்து விடாதீர்கள்" என்று கூறினார். மலரும் அதனைத் தாங்கும் செடியும் கொடியும் ஒன்றாக இணைந்திருக்கும் இயற்கைக் காட்சியினைக் சிதைத்து விடக் கூடாது என்ற பெரிய மனம் படைத்தவர் அந்தக் கவிஞர்.

இயற்கைக் கவிஞரான வேர்ட்ஸ் வொர்த், தமது சகோதரியான டாரத்தி வேர்ட்ஸ் வொர்த்திற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், கொட்டும் அருவியும், குளிர் பூந்தென்றலும், குவிந்திருக்கின்ற, இயற்கையெல்லாம் வாழுகின்ற இனிய இடமாக உன்னுடைய உள்ளம் திகழட்டும் என்று எழுதினார். இயற்கையின் இனிமையெல்லாம் உள்ளத்தில் எப்போதும் தவழ்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதே வேர்ட்ஸ் வொர்த்தின் விருப்பமாகும்.

ஆனால் அருட்பிரகாச வள்ளலாரோ,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்றும்,

கண்ணினால் பிற உயிர் பதைக்கக்

கண்ட காலத்திலும் பதைத்தேன், என்றும்

மண்ணுலகதிலே உயிர்கள் தாம்

வருந்தும் வருத்தத்தை

ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக்
கேட்டும்

கணமும் நான் சகித்திட மாட்டேன் என்றும், தம் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் இரக்க உணர்வைப் பலவாறாகப் பாடியுள்ளார்.

மேலை நாட்டுக் கவிஞர்களோடு இராமலிங்க வள்ளலாரை ஒப்பீடு செய்து பார்க்கும் பொழுது ஓர் உண்மை விளங்குகிறது. மேலை நாட்டுக் கவிஞர் இயற்கையைக் காதலிப்பவர்களாக, இரசிப்பவர்களாக விளங்கினார்கள். ஆனால் இராமலிங்கரின் உள்ளத்தில் இயற்கையைக் காணும் போது கூட, இரக்க உணர்வே மேலோங்கி நிற்பதைப் பார்க்கின்றோம். இயற்கை வேறு தாம் வேறு என்று இல்லாமல் அந்த இயற்கையுடன் ஒன்றி இவ்வியற்கையின் நலம் தீங்குகளில் தம்மை ஒப்புக் கொடுத்து, அவ்வியற்கைக்கு நன்றியும் அன்பும் பாராட்டுகிற உத்தம குணத்தை வள்ளற் பெருமானிடம் பார்க்கின்றோம்.

அருட்பிரகாச வள்ளலாரின் தத்துவங்களின் மூலமாகவும், முடிவாகவும் இருப்பது இரக்க உணர்வு தான்.

கடவுளின் கோட்டைக் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு அருள் இரக்கம் என்னும் சாவி இருக்க வேண்டும் என்றார் இராமலிங்கர்.

சீவகாருண்யச் சித்தாந்தத்தின் அடிப்படை நெகிழ்ந்து நெகிழ்ந்து செல்லுகிற, இரக்க உணர்வு கனிந்து கனிந்து ஊற்றெடுக்கின்ற உள்ளமே ஆகும். எல்லா உயிர்களிடத்தும்

ஒத்து, உரிமை உடையவர்களாக உவக்கின்ற விததகர்களை உருவாக்குவதே சத்திய தருமச் சாலையின் வேலை.

இவ்வாறு தமிழ்நூல்கள் பலவற்றில் அகிம்சைச் சிந்தனைகளைக் காணமுடிகிறது.

அகிம்சையும் சீக்கியமும்

இந்தியாவின் வடமேற்கில் இருப்பது பஞ்சாப் ஆகும். இங்கு குருநானக்கினால் தோற்றுவிக்கப்பட்டது சீக்கிய மதம். இதன் தோற்றம் கி.பி. 15, 16 ஆம் நூற்றாடுகளாகும். இணக்கத்துடன் வாழ்வதே அகிம்சை என்பது குருநானக்கால் தெளிவுறுத்தப்பட்டது. அகிம்சையை நோக்கி மக்கள் இயங்கும்படியாக ஆக்கியவர் குருநானக். ஒத்து இசைந்து செல்லும் இணக்கமான நல்லுணர்வென்பது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிமூலம் அல்லது அடிப்படை என்பதே அவரது கோட்பாடு என்று கூறினார்.

இயற்கையென்பது வாழ்க்கைக்குத் தந்த பரிசு என்பது இணங்கிப்போகும் நல்லுணர்வு. மனிதனின் பார்வை இந்தத் திசையிலேயே செல்வதற்குப் பழக்கப்படுத்த வேண்டும். வீணை இனிய இசைக்காக இசைக்கப்படுகிறது. மனிதனின் வாழ்க்கையும் நல்லிணக்க உணர்வுக்காக இசைக்கப்படுதல் வேண்டும்.

கபீர் அகிம்சை குறித்து வழங்கும் தத்துவம்

மகாத்மா கபீர், குருநானக்கின் காலத்தில் வாழ்ந்தவர். தனக்குத் தானே செய்து கொள்ளும் ஊறுபாடு, தனக்குப் பிறர் செய்யும் ஊறுபாடு எனக் கபீர் அகிம்சையை இருகூறாகக் காண்கிறார். அகிம்சை என்பதே மனிதன் பின்பற்ற வேண்டிய முதன்மைக் கோட்பாடு என்பதைக் கபீர் தெளிவுறுத்துகின்றார். இது குறித்து அவர் கூறுவது..

"ஒரு துறவிக்கு துக்க உணர்வு அறவே இருக்கக் கூடாது. அவர் பிறருக்குத் துக்கத்தைச் செய்யவும் கூடாது. ஒரு தோட்டத்தில் அவர் வாழ்கிறார் என்றால், அங்குள்ள மலர்களுக்கும் இலைகளுக்கும் கூட எவ்விதத் துன்பமும் ஏற்படக் கூடாது" (கபீர் தோகாவலி)

மேற்கூறப்பட்ட கபீரின் மொழிகளுக்கு உள்ளே மிக நுட்பமான உட்பொருள் அடங்கி இருக்கிறது. ஒரு துறவி என்பவன் ஒழுக்கமாக இருப்பதென்பது பந்தமும் பாசமும் இல்லாமல் இருப்பது தான். துறவி என்பவன் தான் அகிம்சை என்பதை நடைமுறையில் கைப்பற்றி நடப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களும் சொல், செயல், சிந்தனை ஆகிய மூன்றாலும் அகிம்சையைப் பின்பற்றி நடக்கத் தக்க வகையில் அவன் வழிநடத்த வேண்டும்.

கபீர் தாம் வாழ்ந்திருந்த காலச் சூழலுக்கேற்ப, அகிம்சை என்கிற வட்டத்துக்குள் அனைத்து மக்களும் ஆட்படும் படியாகச் செய்தார். இரக்கம் என்பதை அதன் அடிப்படையாக ஆக்கினார். அவரைப் பொறுத்தவரை மதம், தருமம் இரண்டும் ஒன்றே என்பதை எடுத்துக்காட்டி மதம் என்பதற்குப் புதிய எளிய விளக்கத்தை வழங்கினார். மதம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம், எளிமைப்படுத்தினார் தருமமும், மதமும் வேறு வேறானவையல்ல என்ற வடிவத்தை வழங்கினார். அதனை ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றுடன் இணைக்கவும் செய்தார். மேலும் அவர் கூறுவதாவது.

"எங்கு இரக்கம் இருக்கிறதோ அங்கு மதம் இருக்கிறது. எங்கு வஞ்சகம் இருக்கிறதோ அங்கே பாவம் இருக்கிறது. எங்குக் கோபம் இருக்கிறதோ அங்கே வளர்ச்சி என்பதற்கு

முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. எங்கு விட்டுக் கொடுக்கும் குணமும் மன்னிப்பும் இருக்கிறதோ அங்கே வளர்ச்சி முன்னேற்றம் என்பதற்குக் கால்கோள் விழா நடத்தப்படுகிறது. மன்னிப்புச் செய்யும் இடத்தில் மன்னிப்பவரும், கடவுளும் ஒன்றாகி விடுகின்றனர். கோபம் என்பதனை அகிம்சையின் உருவம் எனவும் கோபமே அழிவுக்கு மூல காரணமாக அமைந்து விடுகிறது எனவும் கபீர் கூறுகின்றார்.

ஒரு புத்தகத்திற்குப் பல பிரதிகள் இருக்கலாம் எனினும் அதற்கு மூலப்பிரதி ஒன்று இருக்கும். அதுபோல உலகம் எங்கும் மதங்கள் பலவாகக் கிளைத்துப் பெருகி இருக்கலாம். எனினும் மதம் என்பதன் மூலப்பிரதியாக இருப்பது இரக்கம் என்பது தான். இரக்கம் அல்லது தருமம் என்பதிலிருந்தே மதம் தோன்றி இருக்கிறது. தருமம் என்பது தான் அகிம்சையின் நடைமுறைப் பயன்பாடு. இதனை வேறு சொற்களில் கூற வேண்டுமென்றால் தருமம் செய்தல் என்பதே அகிம்சையை நடைமுறைப்படுத்துதல் ஆகும். இவையனைத்தும் கபீரின் கருத்துகள் ஆகும்.

காந்தியடிகளின் நோக்கில் அகிம்சை உணர்வு :

புத்துலகச் சிந்தனைகளில் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சை உணர்வுச் சிந்தனைகள் புதிய பொலிவுடன் தோற்றம் பெறுகின்றன. மகாத்மா காந்தியின் இந்தச் சிந்தனையின் தனி மாண்பு யாதெனில் அகிம்சையை அவர் கொள்கை அளவில் நிறுத்தி விடாமல், நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளார். அகிம்சை தொடர்பான, முற்கால, இடைக்கால, தற்காலச் சிந்தனைகளுள், கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய சிந்தனைகள் ஆகிய அவை அனைத்தின் ஒளிவீச்சு, காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கைகளில் ஒருங்கிணைந்து செல்கின்றது.

பலருடைய கருத்துக்களோடு அகிம்சை பற்றிய காந்தியடிகளின் பார்வை ஒத்துக் செல்வது மட்டுமல்லாமல் அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கௌதம புத்தர் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் அகிம்சைக் கோட்பாட்டிற்குக் காந்தியடிகளின் கொள்கையானது மனிதனின் அன்றாட நடைமுறை வாழ்வில் கைக்கொள்ள வேண்டியவைகளுக்கு உரிய, உறுதியான, தெளிந்த வழிகாட்டுதலாக இருக்கிறது. அகிம்சை, வாய்மை ஆகிய இரண்டையும் காந்தியடிகள் ஒருநிகராகவே கண்டார். காந்தியடிகள் கூறுகின்றார்: "அகிம்சையின் மீது எனக்கிருக்கும் பற்றுதல் இந்தவுலகம், இதற்கும் மேற்பட்டவுலகம் இவற்றிலிருக்கின்ற எல்லாவற்றைக் காட்டிலும் மிக உயர்ந்ததாக இருக்கிறது. அகிம்சைக்கு ஒப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் வாய்மையின் மீது எனக்கு இருக்கும் பற்று. வாய்மையும், அகிம்சையும் எனக்கு ஒன்றே தான். ஏனென்றால் வாய்மையின் வாயிலாகவே அகிம்சையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

வரலாற்றின் உண்மைகளைக் கூர்ந்து நோக்கினால், அகிம்சை என்ற கருத்தினை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை மனிதன் காலந்தோறும் வளர்ச்சி பெறச் செய்து கொண்டு வந்துள்ளான் என்பதைக் காண முடியும் எனக் காந்தியடிகள் கூறுகின்றார்.

தொல்பழங்கால மனிதன் விலங்குகளை வேட்டையாடி அவற்றை உண்டு வந்தான். அதற்குப் பின்னாலே நாடோடியாக இருந்த அவனுடைய வாழ்க்கைப்பாதை சற்றே மாற்றம் பெற்றது. அவன் உழவு செய்வதிலே ஈடுபட்டான்

அவனுடைய வாழ்க்கை நிலபுலன்களில் உழுதுவரும் உணவைச் சார்ந்ததாக மாற்றம் பெற்றது. நாடோடியாக இருந்த தொல்பழங்கால வாழ்வு குடும்பம், சிற்றூர், நகரங்கள், சமூகங்கள், நாடுகள் என நாகரிகம் பெற்றது.

இவையனைத்தும் அகிம்சை எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதைக் காட்டும் நிகழ்வுகளாக இருக்கின்றன. மனிதனின் கொடிய உணர்வானது படிப்படியாகக் குறைந்து அகிம்சைச் செயல்களால் அவனது வாழ்க்கையில் புத்தொளி வீசுவதனையே இவ்வரலாறு காட்டுகிறது. மனிதனின் அகிம்சையின் வளர்ச்சி வரலாறு இவ்வாறு அமையாது போயிருக்குமாயின் அவனும் பிற உயிரினங்களைப் போலவே புதியன படைக்கும் நாகரிகத்தையும், வரலாற்று நினைவுகளைப் பதிக்கும் உயிர்நிலையையும் எட்டிப்பிடிக்காமல் அழிந்து போயிருப்பான். மனிதன் பல்வேறு குடும்பங்களாகப் பல்கிப் பெருகியும், முன்னெப்போதையும் விட மிகுந்த பாதுகாப்புடனும் திகழ்கின்றான் என்றால் அது அவன் அகிம்சை என்ற அடித்தளத்தின் மீது வளர்ந்து நிற்கும் வளர்ச்சியையே வெள்ளிடை மலையாகக் காட்டுகிறது.

அகிம்சையென்பது மனிதனுடைய உள்ளத்தில் மிக முக்கியமானதாக அமைந்து, தொடக்கம் முதல் வளர்ந்து வருகிறது என்பதனை அவன் தனது சமூக வரலாற்றில் உறுதியுடன் பதிவு செய்திருக்கிறான்.

மகாத்மாகாந்தி அகிம்சையென்பதற்குக் காணும் ஆழ்ந்த பொருள் யாது என்பதையும் காண்போம். பிறரைத் துன்புறுத்தாமல் இருப்பது அகிம்சையா? பிறரைக் கொல்லாமல் இருப்பது அகிம்சையா? காந்தியடிகளைப் பொறுத்த வரை அகிம்சையென்பது இவை மட்டுமல்ல. அவர்

கூறுகின்றார். அகிம்சையின் உருவம் பலபரிமாணங்களைக் கொண்டது. உண்மையில் சொல்லப் போனால் "பிறருக்கு ஊறு விளைவிக்கக் கூடாது" என்பது இந்தப் பரிமாணத்தில் ஒரு அணு அளவே. அகிம்சை என்பதிலே இதுமட்டும் அன்றி இன்னும் பல கூறுகள் அடங்கியிருக்கின்றன.

ஒவ்வொரு கொடிய எண்ணத்தின் போதும், ஒவ்வொரு பொய்யைச் சொல்லும் போதும் மற்றொருவன் மீது வெறுப்பைக் காட்டும் ஒவ்வொரு கணத்திலும் அகிம்சையின் முகத்தில் கரி பூசப்படுகிறது; அகிம்சையின் முதுகில் அடி விழுகிறது; மொத்தத்தில் அகிம்சையின் கதவுகள் மூடப்படுகின்றன.

அகிம்சை என்பதனை பொருளாதாரச் சமத்துவத்துடன் காந்தியடிகள் தொடர்புறுத்திப் பேசும்போது,

பொருளாதாரச் சமத்துவம் என்பது ஒவ்வொருவருக்கும் வாழ ஒரு வீடு இருக்க வேண்டும். உண்பதற்குப் போதுமான சரிவிகித உணவு இருக்க வேண்டும். உடுத்திக் கொள்ளப் போதுமான கதர் ஆடை இருக்க வேண்டும். இதுவே பொருளாதாரச் சமத்துவமாக இருக்க முடியும். "(அரிஜன், ஆகஸ்டு 18, 1940).

மேலே குறிப்பிடப்பட்ட அகிம்சை என்பதை மேலும் விளக்கி காந்தியடிகள் 1928 அக்டோபர் 4ஆம் நாளிட்ட "இளைய இந்தியா" (Young India) என்ற இதழில் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"கோபம் காரணமாகவோ சுயநலம் காரணமாகவோ மற்றொரு உயிருக்குத் தீமை விளைவிக்க நினைப்பதோ, அவ்வுயிரைக் கொல்ல நினைப்பதோ இம்சையாகும். தூய

உணர்வை அடிப்படையாகக் கொண்டு ஓருயிருக்குத் துன்பம் தருவதும் கூட தூய அகிம்சையின் பாற்படும்.

ஒரு செயல் இம்சையா அல்லது அகிம்சையா என்பது அச்செயலின் பின்னால் உள்ள உணர்சைப் பொறுத்ததேயாகும்." மேலும் காந்தியடிகளின் இதுபற்றிய விளக்கம் வருமாறு :

ஒரு மனிதன் கையில் கத்தியுடன் வருகிறான். அவன் கடுங்கோபத்துடன் இருக்கின்றான். எதிரில் வருபவரைக் கொன்று அழிக்கின்றான். அவனை யாரும் உயிருடன் பிடிக்க முடியவில்லை. மிகக் இவ்வாறு கொடூரமாக நடந்து கொள்கின்றான். கொடுமை செய்யும் நேரத்தில் அந்தப் பைத்தியக்கார மனிதனைக் கொன்றழிக்கும் ஒருவனைச் சமுதாயம் நன்றி பாராட்டி வரவேற்கும். அவனுடைய செயல் அகிம்சையின் பாற்பட்டதாகவே இருக்க முடியும். ("Theory and Practice of Gandhian Non-Violence" - இரண்டாவது அத்தியாயம்)

மேற்கூறப்பட்ட காந்தியடிகளின் கருத்து பல உண்மைகளைத் தெளிவாக்குகிறது. பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதென்பது முழுமையான அகிம்சை ஆகிவிடாது. அது அகிம்சை என்பதன் ஒரு பகுதி மட்டுமேயாகும்.

ஒருவருக்கும் தீங்கு எண்ணாமல் இருப்பதும், யாருக்கு அநீதி இழக்காமமையும் யாரையும் வெறுக்காமையும், எல்லோருக்கம் பொதுவான ஒன்றினைத் தனியுடைமையாக்கிக் கொள்ளாமையும், தேவைக்கு அதிகமாக எதையும் எடுத்துக் கொள்ளாமையும் இவையனைத்தும் "அகிம்சை" என்பதன் உள்ளடக்கமாகவும், அகிம்சையிலிருந்து பெறப்படுவனவாகவும் இருக்கின்றன.

எவ்வுயிரையும் கொல்லாமையும், எவ்வுரையும் கொல்லக் கூடாது என்ற சிந்தனையும் அகிம்சையின் உச்சாணி நிலை என்பதிலே எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஓர் உயிரைக் காப்பதற்காகவும், ஓர் உயிரின் நன்மை கருதியும், விதிவசத்தாலான கடுந்துன்பத்திலிருந்து ஒருவரை விடுவிப்பதற்காகவும், கடும் நோயுற்றவரை விடுவிக்கும் பொருட்டும் இவ்வகைக் காரணங்களுக்காகக் கருணை அடிப்படையில் ஓர் உயிரைக் கொல்லுவது என்பதும் அகிம்சையின் பாற்படும் என்று காந்தியடிகள் கூறுகின்றார்.

ஆனால் இவ்வாறு கொல்வதற்கான காரணம் சுயநலமாக இருக்கக் கூடாது ; தீங்கு நினைக்கும் எண்ணமாக இருக்கக் கூடாது; பகைமை அல்லது பொறாமை அதன் பின்புலத்தில் இருக்கக் கூடாது. இத்தகைய கருணைக் கொலை என்பதற்கு நல உணர்வும், பிறிதோர் உயிருக்கு நன்மை தர வேண்டும் என்ற எண்ணமும், துன்பத்திலிருந்து விடுவிக்கும் நோக்கமும் ஆகிய உயர்ந்த சிந்தனைகள் பின் புலமாக இருக்க வேண்டும்.

3. அகிம்சை பற்றிய பொதுக் கருத்தும் அதன் இயற்கைத் தன்மையும்

இதன் முன்னர் உள்ள பகுதிகளில் காணப்படும் விவாதங்களால் வேதங்கள், உபநிடதங்கள் அகிம்சைப் பண்பினைப் பெற உதவியதனை நாம் அறிகின்றோம். உலகைக் குறிப்பிட்ட பாதையில் அழைத்துச் செல்லும் நெறிகாட்டுபவைகளில் வேதங்கள் மிகப் பழமையானவை. வேதங்கள் கிறித்து பிறப்பதற்கு முன் ஏறத்தாழ 1500 முதல் 2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. எழுத்து வடிவம் இல்லாத காலத்திலே "ஸ்மிருதி" என்ற பெயரில் இவ்வேதங்களை ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு வாய்மொழி மூலம் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். எழுத்து வடிவம் வந்த பிறகே, வேதங்கள் தொகுக்கப்பட்டிருக்கும் என்று கருதுவது தவறான எண்ணமாகும். மேலும் வேதங்களுக்கு மற்றொரு பெயர் "ஸ்ருதி" என்பதாகும்.

வேத இந்து தத்துவத்தைப் பின்பற்றி நடக்கக் கூடியவர்கள் வழிபடக் கூடிய இருபெருந்தெய்வங்களாக விளங்குபவர்கள் இராமபிரானும், கண்ணனும் ஆவர். அவ்விருவரும் தொல்பழங்காலத்தைச் சார்ந்தவர். தெய்வங்கள் ஆவர். அவர்களுடைய காலங்களில் தான்

அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட மிகப்பெரிய போர்கள் நடைப்பெற்றன.

பகைவனான இராவணனுடன், இராமனுக்கு ஏற்பட்ட போரில் பெருத்த உயிர் இழப்பும் பொருள் இழப்பும் ஏற்பட்டன. இராமாயணக் காப்பியத்தில் கூறப்பட்டிருப்பதாவது : இராமன் போரில் ஈடுபடுவதற்கு முன்னாலே அகிம்சையின் பல வழிமுறைகளைக் கையாண்டு போரினைத் தடுக்கவும், போர்க்களத்தில் இம்சையின் கோரத் தாண்டவத்தைத் தவிர்க்கவும் முயன்றான். அகிம்சையின் வழிமுறைகளுக்கு வெற்றி கிடைக்காத போது தான் போர்க்களத்தில் பகைவரை அழிக்கத் தலைப்பட்டான்.

கண்ணனின் காலத்தில் உலகப் பெரும் போரினைப் போல மகாபாரத யுத்தம் நடைபெற்றது. தருமத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றிய தருமன் முதலானோர் இப்போரிலே வெற்றி கண்டனர். மகாபாரதத்தைப் படிப்பவர் எவரும் அகிம்சை என்பது மதத்தை உயர்வுபடுத்துவது என்பதனை உணர்ந்து கொள்ள முடியும்.

மதங்கள் அகிம்சைத் தத்துவத்தைப் பறை சாற்றுகின்றன. இராமபிரானும், கண்ணபிரானும் போரினைத் தடுத்து நிறுத்தவும், அகிம்சையைத் காக்கூவும் முயற்சி மேற்கொண்டும், எந்த ஒரு வழியும் கிடைக்காமையினால் போர்க்களத்தைக் காண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதனைப் பழங்காப்பியங்கள் எடுத்துப் பேசுகின்றன.

கண்ணபிரானின் பகவத் கீதையில், அகிம்சை பற்றிய அறவுரை காணப்படுகிறது. உண்மைக்கும், அறிவுக்கும் இடையே உள்ள தொடர்பானது, கடவுளுக்கும் வழிபாட்டுக்கும் இடையே உள்ள தொடர்புக்கு

ஒப்பானதாகும். இவ்வுறவு இறைத்தன்மை வாய்ந்தது; எல்லை இல்லாதது.

அகிம்சை மனிதனிடம் இயற்கையாக அமைந்து கிடப்பதால், அவன் வளர்ந்து வளர்ந்து வாழ்க்கையின் குறிக்கோளை அடைய அதுவே வழிவகுக்கிறது.

குருநானக் இசை உணர்வு எவ்வாறு மனிதரிடம் இயற்கையாகவே உள்ளதோ, அவ்வாறே அகிம்சைப் பண்பும் இயற்கையாகவே மனிதரிடம் அமைந்துள்ளது என்கின்றார்.

மகாவீரர், தனி மனிதனை ஆட்கொண்டிருக்கும் ஒப்பற்ற ஆத்ம விசை அகிம்சை எனலாம் என்று கூறுகின்றார்.

மனிதனிடம் பன்னெடுங்காலமாக வளர்ந்து வரும் கூட்டுறவிற்கு அடிப்படை அகிம்சையே.

அகிம்சையைப் பயன்படுத்தி வரும் பொழுது, இறுதியில் நமது சமுதாய நலன்களுக்கான பலன்கள் கிடைக்கின்றன. அத்தகைய பலன்கள் நிலையானவையாக இருக்கும் என்பதால் அதன் முடிவுகளை எட்டிப்பிடிப்பதிலும் காலத்தாழ்வு ஏற்படுகிறது.

அகிம்சை தனிமனித வெளிப்பாடாக இருந்தாலும், அதனால் சமூகப் பயன் கிடைக்கின்றது. தனிமனிதர்களின் கூட்டுறவினால் மெல்ல மெல்ல உருவாதே சமூக அமைப்பு ஆகும். அச் சமூக அமைப்பில் தனி மனிதர்களை ஒருங்கிணைக்கும் விசைதான் அகிம்சை யாகும். ஒருவருக்கொருவர் காட்டுகின்ற இக்கூட்டுறவின் வாயிலாகத்தான் அனைத்து மனிதச் செயல்களும் நடத்தப்படுகின்றன. இந்த விசை செயல்படும் முறையினை ஒரு சமூகத்தை எடுத்துக் கொண்டு பார்த்தோமேயானால்

தெரியவரும். முடிவில் சமூகம் என்பது ஒரு பெரிய குடும்பம் எனக் கூறலாம். அல்லது சமூகம் என்பது தன்னத்தே பல சிறிய குழுக்களைப் பெற்றுள்ள பெரிய குழு என்றும் கூறலாம்.

அகிம்சையுடன் இணைந்துள்ள பண்புகளாவன : சகோதரத்துவம், சமத்துவம், தன்னலமற்ற சேவை, சகிப்புத் தன்மை, ஒற்றுமை முதலியன. இவை அனைத்தும் இணைந்திருப்பினும், "அன்பு" ஒன்றே அகிம்சையின் மிகச் சரியான வெளிப்பாடாகும். அகிம்சையைச் சோதித்து அறிய வேண்டுமெனில் "அன்பு" தான் சிறந்த வழி. அந்த அன்பு மனித இனத்திற்கு மட்டுமே காட்டக் கூடியது அன்று. இப்பூவுலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் நலத்திற்கும் தெரிவிக்கப்பட வேண்டிய உணர்ச்சி "அன்பு" ஆகும். அன்பு இல்லாத அகிம்சையைப் பெறுவது என்பது முழுமையடையாத மனிதனைக் குறிக்கும். அதே நேரத்தில் எந்த மனித இதயம் அன்பினால் நிரப்பப்பட்டு உள்ளதோ அங்கு அகிம்சை வெளிப்படும்.

அகிம்சை என்னும் உணர்வு தொடர்ந்து வளர்ந்து வருவது தான் சிறந்தது; பயன்தர வல்லது. அதுவே வெற்றி இலக்கினை அடைய வழிவகுக்கும். அகிம்சைக்கு மாற்றாக வேறு ஒன்றைச் சுட்டிக்காட்ட இயலாது.

இந்தியாவில் மட்டுமல்லாமல் ஏனைய பிறநாடுகளிலும் கூட அகிம்சை வழிச் செயல்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு நீதி பெறப்பட்டிருக்கிறது. இது அகிம்சைச் சக்தியின் ஆற்றலை உறுதி செய்கிறது. இத்தகைய ஆற்றலை அளவிடும் செயல்முறைகளை இக்கட்டுரையின் இறுதியில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இப்பட்டியலிலிருந்து அசிம்சையின் சக்தியினையும், அதன்

தாக்கத்தினையும் தெரிந்து கொள்ள முடியும். அகிம்சைச் செயல்பாடுகள் எவ்வாறு நீதியை நிலைநாட்டுகின்றன என்பது காலச் சூழலையும் இடத்தையும் பொறுத்து அமைகின்றது. நிகழும் சூழலை நன்கு தெரிந்து கொண்டு, அகிம்சை முறையினைச் செயல்படுத்தி வெற்றி இலக்கினை அடைய வேண்டும். அதே முறையில் எதிர்காலத்திலும் செய்தால் பலன் நிச்சயம் உண்டு.

20-ஆம் நூற்றாண்டில் உலகின் பல்வேறு பகுதியில் நடைபெற்ற அகிம்சை வழியிலான போராட்டங்களின் பட்டியல்

I. **ஆப்பிரிக்கா**

1. எகிப்து நாட்டில் 1918 ல், தங்கள் கட்டுப்பாட்டில் நாட்டைக் கட்டுப்படுத்திய பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போராட்டங்களும், விளக்கக் கூட்டங்களும்.
2. 1937-ம் ஆண்டு கானா நகரில், விவசாயிகள் வெளிநாட்டு ஏற்றுமதி கம்பெனிகள் முன்பு, கோகோ ஏற்றுமதியினை தாமதப்படுத்தும் முகமாகப் போராட்டம்.
3. 1950-ம் ஆண்டு மொரோக்கோவில் பிரெஞ்சு ஆட்சிக்குத் தடைவிதிக்கக் கோரிப் போராட்டம்.
4. 1960-ம் ஆண்டுத் தொடக்கத்தில் ரொடிஷியாவில் பெரும்பான்மையோர் அரசாள வேண்டிப் போராட்டம்.
5. மத்திய ஆப்பிரிக்க நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து சுதந்திரம் வேண்டி 1959-64 ஆகிய ஆண்டுகளில் ஜாம்பியாவில் போராட்டம்.

6. புதிய சுதந்திர நாடான அல்ஜீரியாவில் 1962 ல் ஆகஸ்ட், செப்டம்பரில், உள்நாட்டுப் போரினை அகிம்சை முறையில் தடுத்து நிறுத்தும் முகமாக விளக்கக் கூட்டங்களும் போராட்டங்களுக்கான அச்சுறுத்தல்களும் நடைபெற்றது.

7. டிசம்பர் 1964 மற்றும் சனவரி 1965-ல் சூடான் நாட்டில் "ஜெனரல் அபோட்" ஆட்சியை நீக்குவதற்குக் குடிமக்களின் மாபெரும் போராட்டம். அப்போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றதால் இராணுவம் துப்பாக்கிச் சூட்டினைத் தவிர்த்தது.

II. <u>ஆசியா</u>

1. மகாத்மா காந்தி காலத்தில் 1917-1947 வரை, போராட்டங்கள், ஊர்வலங்கள், சத்தியாக்கிரப் போராட்டங்கள் நடைபெற்றன.

(i) 1917-1918	-	கய்ரா சத்யாக்கிரகம்
(ii) 1920-1922	-	இலாபத் இயக்கம்
(iii) 1923	-	நாக்பூர் கொடிப் போராட்டம்
(iv) 1924	-	போர்சாத் சத்தியாக்கிரகம்
(v) 1924	-	வங்காளத்தில் ஹூக்ளியில் சித்தரஞ்சன் தாசால் துவக்கப்பட்ட சமய மறுமலர்ச்சி இயக்கம்
(vi) 1928	-	பர்தோலி கிஸான் அன்டோலன் குடியுரிமைப் போராட்டம்.

(vii) 1930	-	உப்பு வரியை எதிர்த்துக் காந்தியால் துவக்கப்பட்ட போராட்டம்
(viii)1937	-	மறிலத்தில் நல்லாட்சி வேண்டி மைசூரில் மக்கள் போராட்டம்
(ix) 1938	-	ராஜ்கோட் சத்தியாக்கிரகம்
(x) 1940	-	சத்தியாக்கிரகப் போராட்டம்
(xi) 1942	-	வெள்ளையனே வெளியேறு இயக்கம்

2. சீனாவில் மே 1919 ல் மாணவர்களின் போராட்டம் வெடித்தது. பல இடங்களில் வன்முறை ஏற்பட்டது.
3. 1919 - கொரியாவில் சுதந்திர இயக்கம், போராட்டங்களும், வெளிநடப்பும் ஏற்பட்டது.
4. 1936 - ஜப்பான் நாட்டில் இராணுவ ஆட்சிக்கு எதிராக மாபெரும் போராட்டம்.
5. 1960 - பூமிதான இயக்கம் வினோபபாவேயின் முயற்சியால் ஏற்பட்டது.
6. 1960 - கோவாவில் சத்தியாக்கிரகப் போராட்டம்
7. 1960 - இஸ்ரேல் நாட்டில் சம உரிமை வேண்டி அரபியர்களால் நடத்தப்பட்டது.
8. 1963 - வியட்நாமில் மக்கள் புரட்சி
9. 1966 - ஹ்யூ, டானா, டானங்கு, செய்கோன், வியட்நாம் ஆகிய நாடுகளில் மாபெரும் புரட்சி.

10. 1967-68 - வியட்நாமில் மாணவர்கள் புரட்சி.

11. 1967-69 - அரபு நாட்டில் இஸ்ரேல் ஆட்சிக்கு எதிராக விளக்கக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்.

12. 1968, ஜனவரி - வியட்நாமில் உள்ள செய்கோனில் மிகப் பெரிய போராட்டம்.

13. 1975 - குஜராத்தில் ஜனநாயகம் திரும்ப வேண்டும் என சாகும் வரை மொரார்ஜி தேசாய் உண்ணாவிரதம்.

14. 1986 - பிலிப்பைன்ஸ் நாட்டில் புரட்சி.

III. <u>ஆஸ்திரேலியா</u>

1. 1920 - நியூஸிலாந்தில் உள்ள மேற்கு சமோவில் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம்.

2. 1930 - நியூஸிலாந்தில் அரசுக்கு எதிராக இராணுவச் சட்டத்தைத் திரும்பப் பெறப் போராட்டம்.

IV. <u>ஐரோப்பா</u>

1. 1902 - சூடான் நகரில் அரசியலில் வாக்குரிமை வேண்டி பொது வேலை நிறுத்தம்.

2. 1905 - ரஷ்யாவில் மக்கள் போராட்டம்.

3. 1906 முதல் 1914 வரை பிரிட்டனில் பெண்கள் வாக்குரிமை வேண்டிப் போராட்டம்.

4. 1909 - சூடானில் பொது வேலை நிறுத்தம்.

5. 1914 - ஸ்பெயினில் முதல் உலகப் போரில் நுழையத் தடை விதிக்கக் கோரித் தொழிலாளர்கள் போராட்டம்.

6. 1917 - ஹாலந்தில் முதல் உலகப் போரின் போது பெண்கள் வாக்குரிமை வேண்டிப் போராட்டம்.

7. 1917 - இராணுவம் கைப்பற்றியதனை எதிர்த்து அயர்லாந்தில் பிரிட்டனுக்கு எதிராகப் போராட்டம்.

8. 1920 மற்றும் 1926 - பிரிட்டன், பிரான்ஸ், அயர்லாந்து ஆகிய நாடுகளில் சுரங்கத் தொழிலாளர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டம். கப்பல்களில் ரஷியாவுக்கு அனுப்புவதற்கான படைக் கருவிகளை ஏற்ற மறுத்துப் போராட்டம்.

9. 1934, அக்டோபர் - ஹங்கேரியில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் அமர்ந்திருந்து உண்ணா நோன்புப் போராட்டம்.

10. 1936-1937 - பிரான்சில் தொழிற்சாலைகளில் உள்ளிருப்புப் போராட்டம்.

11. இரண்டாம் உலகப் போரின் போது, ஹலாந்திலிருந்து ஜெர்மன் குடியிருப்புக்குச் செல்லுவது தொடர்பான எதிர்ப்பு உணர்வுகள்.

12. 1956 - இளவேனிற் காலத்தில் போலந்தில் உணவும் விடுதலையும் கோரிப் போராட்டம்.

13. 1968, நவம்பர் - லண்டன் டெர்ரி, வட அயர்லாந்து ஆகிய இடங்களில் போராட்டம்.

14. 1968 மே, ஜூன் - பிரான்சில் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களால் தலைமை வகித்து நடத்தப்பட்ட பொதுமக்கள் கலகம்.

15. 1968 - இளவேனிலில் ஜெர்மனியில மாணவர்களால் நடத்தப்பட்ட செயல்விளக்கக் கூட்டங்கள்.

16. 1968 - இளவேனிலில் போலந்தில் மாணவர்களால் நடத்தப்பட்ட செயல்விளக்கக் கூட்டங்கள்.

17. 1968 - இளவேனிலில் யூகோஸ்லாவியாவில் மாணவர்களால் நடத்தப்பட்ட செயல்விளக்கக் கூட்டங்கள்.

18. 1968 - இளவேனிலில் இத்தாலியில் மாணவர்களால் நடத்தப்பட்ட செயல்விளக்கக் கூட்டங்கள்.

19. 1968-69 - இளவேனிற் காலத்தில் தொழிலாளர்கள், மாணவர்கள் பாதிரியார்கள் ஆகியோர் இணைந்து நடத்திய போராட்டம்.

20. 1969 கோடைக்காலம், இலையுதிர் காலத்தில் இத்தாலியில் நடை பெற்ற பொது வேலை நிறுத்தம்.

21. 20-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் கிழக்கு ஐரோப்பாவின் பல நாடுகளில் குடியரசாட்சி நிருமாணிக்கப்பட்டது.

IV. **வட அமெரிக்கா**

1. 1955 - அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியுரிமைக்காக நடைபெற்ற ஆஃப்பிரோ அமெரிக்க இயக்கம்.

2. 1960 - கருப்பு இன மக்களால் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற பல்வேறு இயக்கங்கள்.

3. 1964 - அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விடுதலைப் பயணங்கள்.

4. 1963 - ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள அல்பேனியா மாநிலத்தில், கருப்பர்களுக்குப் பொது இடங்களில் காட்டப்படும் பாரபட்சங்களைக் களையவும், உள்நாட்டு வணிகத்தில் காட்டப்பட்ட இன ஒதுக்கல் கொள்கையை உடைத்து எறியவும் மார்டின்

லூதங்கிங் ஜூனியரின் தலைமையில் நடை பெற்ற பர்மிங்ஹாம் இயக்கம்.

5. 1964 - ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வட மேற்குப் பகுதியில் நடைபெற்ற அகிம்சைப் போராட்டங்கள்.

6. 1965 - ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள கலிபோர்னியா டெலேனாவில் திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்ட போராட்டம், வேலை நிறுத்தம்.

7. 1966 - செப்டம்பர், அக்டோபர், கனடாவில் விலைவாசி உயர்வை மறுத்து உணவுப் பண்டகசாலைகளின் முன்பாக ஒட்டாவா பெண்களின் எதிர்ப்புப் போராட்டம்.

8. 1968 - ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நியூயார்க் மாநிலத்தில் மொகாக் இயக்கம்.

9. 1968 - ஐக்கிய அமெரிக்க நாடுகளில் "ஸ்டான்போர்டு" முதலான இடங்களில பல்கலைக் கழக மேம்பாடு குறித்த மாணவர் போராட்டங்கள்.

V. தெற்கு (லத்தின்) அமெரிக்கா

1. 1930 - பெரு நாட்டில் அரசாட்சி மாற்றம் வேண்டி மாணவர் வேலை நிறுத்தம்.

2. 1930 - அர்ஜென்டினாவில் அரசாட்சியை வீழ்த்த மாணவர் போராட்டமும் அதனால் ஏற்பட்ட குடிமக்கள் கலகமும்.

3. 1930 - பொலிவியாவில் அரசாட்சியை வீழ்த்ததுவதற்காக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டம், பின்னர் குடிமக்கள் உரிமைப் போராட்டமாக வெடித்தது.

4. 1930 - நவம்பர்-மார்டின் எல் சால்வெடாரில், புரட்சியாளர்களின் உண்ணாவிரதப் போராட்டம்.

5. 1933 - கியூபாவில் அதிபர் மச்சாடோவை வீழ்த்துவதற்காக மேற் கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தம்.

6. 1935 - சாக்சோ போரின் இறுதிக் கட்டத்தில் பொலிவியா நாட்டு உழவர்களால் மேற்கொள்ளப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள்.

7. 1944, ஜூலை - நிகராகுவாவில் பொது வேலை நிறுத்தம்.

8. 1944 எல்சால்வெடாரில் நெடுநாட்கள் பதவி வகித்த சர்வாதிகாரியை வீழ்த்தி வெற்றி கண்ட பொது வேலை நிறுத்தம்.

9. 1946 - எல்சால்வெடாரில் பொது வேலை நிறுத்தம்

10. 1948, ஏப்பிரல் - கொலம்பியாவில் "பொகாட்டா புரட்சி" தொடர்பான பொது வேலை நிறுத்தம்.

11. 1952-1953 பொலிவியாவில் உழவர் நாட்டு இயக்கம்.

12. 1954 - ஹோன்டுராசில் ஐக்கிய பழக் குழுமத்தினை எதிர்த்துப் போராட்டம்.

13. 1957, மே - கொலம்பியாவில், மாணவர்களின் தூண்டுதலால் பொதுமக்கள் போராட்டமும் அதன் காரணமாகப் பினெல்லாவின் வீழ்ச்சியும்.

14. 1958 - வெனிசூலாவில் கடற்படை வீரர்களின் ஆதரவுடன் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தால் அரசு வீழ்ச்சியடைந்தது.

15. 1959 - அர்ஜென்டினாவில் பொது வேலை நிறுத்தம்
16. 1960 - கொலம்பியாவில் உழவர்களால் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் நில ஆக்கிரமிப்பு.
17. 1960 - எல்சால்வெடாரில் மாணவரின் புரட்சி காரணமாக லீமசின் வீழ்ச்சி.
18. 1961 - ஈக்வெடாரில் வெலாஸ்கோ இபெராவைத் தூக்கி எறிந்த பொது வேலை நிறுத்தம்.
19. 1962 - பனாமாவில் பக்கோரா பள்ளத்தாக்கில் மாணவர் வேலை நிறுத்தத்துடன் இணைந்த உழவர்களின் நில ஆக்கிரமிப்புப் போராட்டம்.
20. 1962 - பெருநாட்டில் ஆயிரக்கணக்கான நிலமற்ற உழவர்களின் நில ஆக்கிரமிப்புப் போராட்டம்.
21. 1962-1964 - பிரேசிலில் உழவர்களின் மலைத் தோட்ட ஆக்கிரமிப்புப் போராட்டம்.
22. 1963 - சிலிநாட்டில் திராட்சைத் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.
23. 1963 - பெருநாட்டில் உழவர்களின் பண்ணை நுழைவுப் போராட்டம்.
24. 1966 - வடகிழக்குப் பிரேசிலில், ஆர்ச் பிஷப் டாம் ஹெல்டர் கெமாராவை உட்படுத்திய செயல்விளக்கப் போராட்டம்.
25. 1981 - கோடைக்காலத்தில் மெக்சிகோவில் நடைபெற்ற மாணவர்களின் செயல் விளக்கப் போராட்டம்.
26. 1996 - மெக்சிகோவில், மெக்சிகோ குடிமக்களுக்கு எதிராக நூற்றாண்டு காலங்களாகத் தொடர்ந்த தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான அமைதிப் பேரணி.

BIBLIOGRAPHY

Acharya Hariharananda, Patanjalayogadarshnam, Motilal Banarshidas, Delhi, Forth Edition, 1987.

Bloomfield M. {Translated by}, Hymns of the Atharvaveda, APD, New Delhi, 1990.

Buhler G. {Translated by}, The Laws of Manu, Atlantic, New Delhi, 1990.

Buhler G. {Translated by} The Sacred Laws of the Aryans, Part I & II APD, New Delhi, 1990.

Campbell, Joseph {Edited by}, Heinrich Zimmer's Philosophies of India, Meridian Books, Inc., New York, Forth Edition, 1959.

Chatur Sen A., Buddha Aur Boddh Dharma, Sanmarg, Delhi. First Hindi Edition, 1992.

Cowell E.B. {Translated by}, Buddhist Mahayana Text, APD, New Delhi, 1990.

Das Shyamsunder, Kabi Granthawali, Nagri Pracharini Sabha, Kashi, 1984

Desai Mahadev and Ganesan S., With Gandhiji in Ceylon, Madras, 1928.

Evangelista Susan, Non-Violence: A Text, Interdisciplinary Studies Program, Ateneo De Manila University, Manila, Philippines, 1994.

Gallie W B, Philosophers of Peace and War, Cambridge University Press, First Edition, 1978.

Galtung Johan, The Struggle for Peace Gujarat Vidyapith, Ahmedbad, First Edition, 1984.

Gandhi Mohandas Karamchand, An Autobiography or The Story of My Experiments withTruth, Navajivan Publishing House, Ahmedabad, 1956.

Gandhi Mohandas Karanchand, The Essence of Hinduism, Navajivan Publishing House, Ahmedabad, First Edition, 1987.

Gandhi Mohandas Karamchand {Edited by}, Harijan Weekly, 1933-46. Published under the auspices of H.S.S., and from 1942 by Navajivan Trust, Ahmedabad.

Gandhi Mohandas Karamchand, Satyagraha in South Africa, Navijan, Ahmedabad, Second Edition, 1950.

Gandhi Mohandas Karamchand {Edited by}, Young India Weekly, 1919-1931, Reprinted in Thirteen Volumes, Navjivan, Ahmedabad, 1984.

Goyandka H. {Commentary by}, Ishadi Nau Upanishads, Gita Press, Gorkahput, Eighth Edition, 1976.

Gregg B., The Power of Non-violence, James and Clarke, London, 1960.

Harrison Paul, The Third World Tomorrow, Penguin Books, London, 1980.

Jain Mahendra Kuman, Kabir Dohawali, Dakshin Bharat Hindi Prachar Sabha, Madras, Second Hindi Edition, 1959.

Jain Mahendra Kumar {Edited by}, Haribhadra Suri's Shadadarshana, Bhartiya Jnanapeeth Prakashan, New Delhi, First Hindi Edition 1963.

Jacobi Hermann, Jaina Sutras, Volume I & II, Atlantic, New Delhi, 1990.

Jolly Julius {Translated by}, The Institutes of Vishnu, APD New Delhi, 1990.

Kalpaprashashtadeve {Commentary by} Vaisheshika Darshan, Banaras, 1924.

Karambelkar V.W., The Atharvavedic Civilzation, Nagpur, University, Nagpur, 1959.

Kumar Ravindra {Edited by}, Global Peace-An International Journal of Philosophy, Peace, Education, Culture and Civilization...., Volume -1, Numbers 1-4, Volume-2, Number-1-2, Meerut, 2001-2002.

Kumar Ravindra, Shanti Ki Aur, Volume First and Second, Love and Company, Meerut, First Hindi Edition 2001-2002.

Kumar Ravindra, Theory and Practice of Gandhian Non-Violence, Mittal, New Delhi, First Edition, 2002.

Lakey George, Exploring Non-Violent Action, London 1970.

Machwe Prabhakar, Kabir, Sahitya Akademi, New Delhi, First Hindi Edition, 1977.

Max Muller F. {Translated by}, The Dhammapada, Atlantic, New Delhi, 1990.

Max Muller F. {Translated by}, The Upanishads, Part I & II, APD, New Delhi Reprint, 1990.

Miller William Robert, Non-Violence: A Christian Interpretation, Schoken Books, New York, 1964.

Mishra Shivagopal {Translated by}, Bhagvad-Gita As It Is, Bhaktivendenta Book Trust, Mumbai, Third Hindi and English Editions, 1983.

Muni Nagaraj, Agam Aur Tripitika: Ek Anusheelan, Part I & II, Calcutta, First Hindi Edition, 1969-1982.

Nehru Jawaharlal, Discovery of India, Asia Publishing House New Delhi, 1961.

Pande BN, Hinduism and Islam, SS Academy, A.M.U., Fist Edition, 1988.

Panasheekar Vasudev Laxmanshastri {Edited By}, Maharshi Valmiki's Yogvashishtha, Part I and II, Bombay, 1911-1937.

Radhakrishnan S., Indian Philosophy, Part I & II, Rajpal & Sons, Delhi, 1986.

Raghavan V., Universal Love and World Unity, Bharatiya Vidya Bhavan, Bombay, First Edition, 1978.

Rajaneesh A., Philosophy of Non-Violence, Motilal Banarsidad, Delhi, First Edition, 1964.

Rhy Davids T.W {Translated by}, Buddhist Sutras, APD, New Delhi, 1990.

Sagar Mataprasad {Transalated by}, Dhammapada, Cultural Publishers, Lucknow, First Hindi Edition, 1985.

Sankritayayan Rahul {Translated by}, Majjhim Nikay, Mahabodhi Sabha, Sarnath, First Hindi Edition, 1933.

Sankritayayan Rahul {Translated by}, Vinayapitika, Mahabodhi Sabha, Sarnath, First Hindi Edition, 1935.

Sharma Harishankar and Shastri Vijay Muni, Ratna Muni Smritigranth, Agra, First Edition, 1964.

Sharma S. {Edited by}, Atharvaveda, S M. Aundh, First Edition, 1995.

Sharma S. {Edited by}, Rigveda, S.M. Aundh, First Edition, 1994.

Sharp Gene, The Politics of Non-Violent Action, Part First: Power and Struggle, Porter Sargent Publishers, 1973.

Shastri G.M. {Translated by}, Brihadaranyak Upanishad, SSK, Ahmedabad, Second Edition, 1946.

Shastri Manohar Muni, Isimasiai Suttai, Mumbai, 1963.

Shastri Nemichandra A Critical History of Prakrit Language and Literature, Tera Publications, Varansi, First Hindi Edition, 1966.

Shukla BN Prasad, Bhratahari Vairagyasataka, Lucknow, First Hindi Edition, 2001.

Sukla BN Prasad, Nanakvani {Japuji}, Lucknow, First Hindi Edition, 1999.

Shukla Ramchandra, Goswamy Tulsidas, Pracharini Sabha, Varanasi, 1972.

Sogani Kamalchand, Ethical Doctrines in India, J.S.S.S., Solapur, First Edition, 1967.

Telang K.T., The Bhagavadgita, Atlantic, New Delhi, 1990.

Tendulkar K.G. {Edited by}, Mahatma: Life of Mohandas Karamchand Gandhi, Volume I to 8, Bombay, 1953.

Thakur Laxmidutta, Pramukh Smiritiyon Ka Adhyayan, Hindi Samiti Uttar Pradesh, Lucknow, First Hindi Edition, 1965.

The Greatest is Love, An Edition of the Living New Testament, Tyndale House Foundation, 1967.

Thoreau H., On the Duty of Civil Disobedience, Houseman's London, 1980.

Tiwari K.N., World Religions and Gandhi, Classical Publishing Company, New Delhi, First Edition, 1988.

Tolstoy L., Letter to a Hindu, Pease News, London, 1963.

Walker C.C., A World Peace Guard: An Unarmed Agency for Peacekeeping, Academy of Gandhian Studies, First Edition, Hyderabad 1981.

மகாவீரர்

மகாவீரர் சமண மதத்தின் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர். கி.மு.599 முதல் கி.மு. 527 வரை வாழ்ந்தவர். தூய்மையும் வாய்மையும் கொண்டு மக்களை அறவழியில் நெறிப்படுத்தி அழைத்துச் செல்வோரை தீர்த்தங்கரர் என அழைக்கப்படுகின்றனர். மகாவீரர் சமண நெறியைப் பரப்பக் கடுமையாக உழைத்தவர். மகாவீரர், நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை ஆகியவற்றை மக்கள் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தினார். இவை சமணத்தின் மூன்று இரத்தினங்கள் எனப்படுகின்றன. அகிம்சை, சத்தியம், ஆஸ்தேயம், தியாகம், பிரமசரியம் என்ற ஐவகைச் சமணத் தத்துவ அடிப்படைகளுக்கு வலிமையான பொருள் உணர்வை வழங்கி உண்மைத் துறவை உலகிற்குக் காட்டியவர் மகாவீரர்.



முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு

தமிழாசிரியப் பயிற்சியில் மாநில முதன்மை பெற்ற இவர், வேலூர் நா.இ. இராகவனின் நட்பைப் பெற்றார். மாநில நல்லாசிரியர் விருதும், முனைவர் பட்டமும் பெற்றவர். 'கம்பனும் உளவியலும்' 'கம்பன் காட்டும் தலைமைப் பண்புகள்' ஆகியவை இவர் வெளியிட்ட நூல்கள். இவரது பல கல்வியாராய்ச்சிக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் பதவியின் வாயிலாக நிருவாகப்பணி கல்விப்பணி இரண்டையும் சிறப்படையச் செய்துள்ளார்.



முனைவர் ச. வின்செண்ட் டி பால்

வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். 'பன்னிரண்டாம் வகுப்பு மாணாக்கருக்குச் செய்முறை வேதியியல்' என்ற இவரது நூல் 1989–இல் வெளியிடப் பெற்றது. 25க்கும் மேற்பட்ட அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட கல்வி ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். 10க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார். புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் திட்டமிடல் மற்றும் மேலாண்மைத் துறையின் தலைவராகவும், கல்வி ஆய்வுகளின் நெறியாளராகவும் பணியாற்றுகின்றார்.